# அரசு ஊழியர்

மாத இதழ்

2022 ஜூன்

மலர்:43 இதழ்:06

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி *9677003178*

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



**முகவரி:**

*பழைய எண். 48*
*புதிய எண் 46, தேரடித் தெரு*
*திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.*
*மின்னஞ்சல்* : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**

*சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,*
*சென்னை - 600002*

**ஆண்டுச் சந்தா** : *ரூ.100*
**தனி இதழ்** : *ரூ.10*


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...


1. **வாளேந்துவதைத் தவிர வேறு வழியேது நமக்கு!** *தலைவர் மடல் ....................4*
2. **சேலம் மாநில செயற்குழு முடிவின் வெற்றியை உறுதி செய்வோம்!** *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து....................7*
3. **இயக்கத்தின் ஆணிவேர்கள்** *தோழர் என்.எல்.எஸ்....................11*
4. **பாதுகாக்கப்பட வேண்டிய பாதுகாப்புத் துறை** ....................*15*
5. **ஒரு புயல் பறவையின் பாடல்**...........*18*
6. **லிவிங் டுகெதர் அரசு ஊழியர்களுக்கு பொருந்துமா**.....*20*
7. **மௌனம் கலையட்டும் மாண்புமிகு முதல்வரே!** .................*23*
8. **பாதுகாப்பான உணவு பாதி ஆரோக்கியத்திற்கு சமம்!** ........*27*
9. **மகப்பேறு விடுப்பில் தமிழக அரசின் தாயுள்ளம்!**.............*28*
10. **புதுவையின் சிவப்பு சூரியன்**..........*30*
11. **நாற்பதாண்டு கால கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி ஒரு நடை பயணம்!**....................*31*
12. **பட்டினப் பிரவேசம்!** ...................*32*


தலைவர் மடல்

# வாளேந்துவதைத் தவிர வேறு வழியேது நமக்கு!

அரசு ஊழியர்களின் தற்போதைய நிலையைப் பார்க்கும் போது அம்புலிமாமா இதழில் வரும் வேதாளம் விக்கிரமாதித்தன் கதைதான் நினைவுக்கு வருகிறது. பிரதிஷ்டானபுரம் என்ற பகுதியை விக்ரமாதித்தன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய தர்பாருக்கு காந்திசீலன் என்ற முனிவர் தினமும் வந்து, அவனுக்கு ஒரு பழத்தை கொடுத்து விட்டுச் சென்றார். பழத்திற்குள் விலை உயர்ந்த ரத்தினக் கற்கள் இருந்தன. விக்ரமன் அவரிடம், “சுவாமி, தினமும் ஒரு பழத்தில் ரத்தினக் கற்களை வைத்து தருகிறீர்களே... ஏன்?” என்று கேட்டான். அதற்கு பதிலளித்த முனிவர், “விக்கிரமாதித்யா, மிகப் பெரிய நன்மையை சுத்த வீரனான உன் மூலம் செய்தாக வேண்டும். இல்லையெனில் இந்நாட்டுக்கு பெரும் கேடு ஏற்படும். அதனால்தான் உன்னை தினமும் வந்து பார்கிறேன்” என்றார். விக்ரமாதித்தன், “அப்படியா? நான் என்ன செய்ய வேண்டும்?” என்றான். “கிருஷ்ணபட்ச சதுர்த்தியன்று நள்ளிரவில் ஊருக்கு வெளியே தென் திசையில் இருக்கும் மயானத்துக்கு நீ சென்றால், அங்கு ஒற்றை மரம் இருக்கும். அதில் ஆணின் உடல் தொங்கிக்கொண்டிருக்கும். அதை எடுத்துக் கொண்டு என்னிடம் வா.” என்றார்

விக்ரமாதித்தன் அவர் கூறிய திசையை நோக்கி நடந்தான். அங்கு ஓர் ஒற்றை மரத்தில் ஆணின் உடல் தொங்கிக் கொண்டிருந்தது. மரத்தின் மேல் ஏறி கயிற்றை அறுத்து, உடலை கீழே தள்ளினான். கீழே விழுந்த அந்த உடல் அழுதது. அந்த உடலில் உயிர் இருப்பதாக நம்பிய விக்ரமன், அதைத் தூக்க முயற்சித்தான். உடனே உடல் சிரிக்க ஆரம்பித்தது. “ஏன் இப்படிச் சிரிக்கிறாய்” என மன்னன் கேட்ட அடுத்த நொடி மீண்டும் மரத்தில் சென்று தொங்கியது அந்த உடல். அது வேதாளம் என்பதை உணர்ந்து கொண்ட விக்கிரமாதித்தன், மீண்டும் அதை கீழே கொண்டு வந்து முதுகில் சுமந்து சென்றான். அப்போது அந்த மனித உடலுக்குள் இருந்த வேதாளம் பேச ஆரம்பித்தது. "மன்னா, நான் ஒரு கதை சொல்கிறேன். கதையின் முடிவில் ஒரு புதிர் போடுவேன். அதற்கு விடை கூறாமல் மவுனமாக இருந்தால், உன் தலை வெடித்து சிதறி விடும்.” என்று விக்ரமனை மிரட்டியது. விக்ரமாதித்தனும் புதிருக்கு விடை கூற ஒப்புக்கொண்டான்.

வேதாளத்தின் புதிருக்கு சரியாக பதில் கூறியதால் அடுத்த நொடி, வேதாளம் மீண்டும் மரத்தில் சென்று தொங்கியது. இப்படியே, ஒவ்வொரு கதையாகச் சொல்லி அவனிடம் கேள்விகள் கேட்பதும். அவன் சரியாக பதில் சொன்னதும் மீண்டும் மரத்தில் ஏறிக் கொள்வதுமாக வேதாளம் தொடர்ந்து கதை கூறிக்கொண்டே இருக்கிறது. விக்கிரமனும் பதில் சொல்லிக்கொண்டே இருக்கிறான். ஆனால் அவன் உடலை மீட்டு வந்த பாடில்லை. இது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. அந்த கதை போல்தான் அரசு ஊழியர்களின் கதையும்.




நாமும் விக்கிரமாதித்தனைப் போல் கடந்த 19 ஆண்டுகளாக போராடி வருகிறோம். இன்று வரை பலன் கிடைத்த பாடில்லை. 2003 ஆம் ஆண்டு வாஜ்பாய் தலைமையிலான பாஜக அரசு, புதிய ஓய்வூதியத் திட்டம் 01.04.2004 முதல் அமல் படுத்தப்படும் என்று அறிவித்த போது முந்திரிக்கொட்டையாய் முந்திக் கொண்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ் நாட்டில் 01.04.2003 முதல், புதிய ஓய்வூதியத் திட்டத்தை அமல் படுத்தியவர் மறைந்த முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள். அதை எதிர்த்தும் திரும்பப் பெற வலியுறுத்தியும் அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து போராட்டங்கள் நடத்தியபோது அதைப் பார்த்து 2006 தேர்தலின்

போது, திமுக ஆட்சிக்கு வந்தால் புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியவர் மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள். 2006ல் திமுக அரசமைத்ததும் அவரிடம் அவர் கொடுத்த வாக்குறுதிகளை ஞாபகப் படுத்தியும், போராட்டம் நடத்தியும் அவர் கண்டுகொள்ளவில்லை.

2011 சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா அம்மையார் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயே அதிமுக ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்ததால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அதிமுகவிற்கு வாக்களித்தனர். அவர் கொடுத்த வாக்குறுதியும் ஏமாற்றமாய் போய்விடக் கூடாதே என்று 2016ல் கடைசி சட்டமன்ற கூட்டம் நடந்த நேரத்தில் அரசு ஊழியர் சங்கம் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்திற்குப் பிறகு, பிரிவு 110 விதியின் கீழ் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக சாந்த ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். தலைமையில் ஒரு குழுவை அமைத்து மூன்று மாதத்திற்குள் அது அறிக்கை சமர்பிக்க உத்தரவிட்டார் ஜெயலலிதா. அந்த மூன்று மாத கால அவகாசம் ஒன்பது முறை நீட்டிக்கப்பட்டது. ஒன்பதாவது முறை நீட்டிக்கப்பட்ட சாந்த ஷீலா நாயர் குழு அதோடு எந்தவித அறிவிப்புமின்றி விடப்பட்டது.

2016ஆம் ஆண்டு சட்டப் பேரவை தேர்தலிலும் ஜெயலலிதா அம்மையாரே சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற போதிலும் உடல் கோளாறு காரணமாக ஓராண்டிரற்குள் மரணமடைந்தார். அவருக்குப் பின்னர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் பதவி ஏற்றுக்கொண்ட போதிலும் ஊதியக்கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தாததால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் (ஜாக்டோ-ஜியோ) வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி அது நீதிமன்ற வழக்காக மாறி மதுரை உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் ஊதிய மாற்றம் பல குறைபாடுகளுடனும் 21 மாத நிலுவை தொகையை தராமலும் அறிவிக்கப்பட்டது. அந்த சமயத்தில்தான் சாந்த ஷீலா நாயருக்குப் பிறகு ஸ்ரீதர் கமிட்டி அமைக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை உயர் நீதிமன்றம் அந்த அறிக்கையை படித்துவிட்டு அதை விமர்சனம் செய்தது. இதற்குப் பிறகும் அந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை ரகசியமாக வைத்திருந்து ஓராண்டுக்குப் பிறகு நிருபர்கள் சந்திப்பின் போது ஸ்ரீதர் கமிட்டி ரிப்போர்ட்டில் பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு சாத்தியமே இல்லை என்று கூறபட்டுள்ளதாக எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார். அந்த ஸ்ரீதர் கமிட்டி அறிக்கையை பரிசீலிப்பதாக தற்போதைய தி.மு.க.அரசுத் தரப்பில் தெரிவிக்கப் பட்டதும் அதன்பிறகு நிதியமைச்சர் திரு.பழனிவேல் தியாகராஜன் சட்ட மன்றத்தில் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு சாத்தியமேயில்லை என்று கூறியதும் நிகழ்ந்தேறி உள்ளது.

பழைய ஓய்வூதிய திட்டத்தில் உள்ள சிக்கல்களை முன்கூட்டியே தெரிந்தவர்தான் முதல்வர். அவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்த பின்னர்தான் அவர் அதை மீண்டும் செயல்படுத்த தேர்தல் வாக்குறுதி மட்டுமல்ல, நம்முடைய போராட்டத்தையே விலக்கிக் கொள்ளச் சொன்னவர் அவர். ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் (PFRDA) உறுப்பினராகவே இல்லாத தமிழ் நாட்டை அதில் உறுப்பினராக உள்ள இராஜஸ்தான் அரசின் நிலையோடு ஒப்பிட்டு பேசியிருப்பது அரசு ஊழியர்கள் மட்டத்தில் பலவித சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமின்றி தனது உரையில் பழைய ஓய்வூதியத்திற்காக ஆண்டிற்கு ஒரு ஊழியருக்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவழிக்கப்பட்ட நிலையில், புதிய ஓய்வூதிய திட்டத்தில் ஒரு ஊழியருக்கு ரூபாய் ஐம்பதாயிரம் மட்டுமே செலவாவதாக நிதியமைச்சர் எந்த அடிப்படையில் தெரிவித்துள்ளார் என்பதும் புதிராக உள்ளது.

இன்று, இராஜஸ்தான் மாநிலத்தை தொடர்ந்து சத்தீஸ்கர் மாநிலத்திலும் காங்கிரஸ் தலைமையிலான மாநில அரசு பழைய ஓய்வூதிய திட்டத்தை அறிவித்து விட்டது. புதிய ஓய்வூதிய திட்டத்திற்கான சட்டத்தை இயற்ற பாஜகவுடன் கைகோர்க்க தயங்காத

காங்கிரஸ் கட்சி இன்று தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு தான் ஆட்சியில் உள்ள இரண்டு மாநிலங்களில் மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த அறிவிப்புகளை வெளியிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த இரண்டு மாநிலங்களை தொடர்ந்து காங்கிரஸ் கட்சி தெலுங்கானா, மத்தியபிரதேசம், கர்நாடக மாநிலங்களில் நடைபெறவுள்ள மாநில சட்டசபை தேர்தல்களிலும் பழைய ஓய்வூதியத் திட்டம் என்பதை தேர்தல் வாக்குறுதியாக வழங்க உள்ளது. மற்ற மாநில செயல்பாடுகள் இவ்வாறு உள்ள நிலையில் தமிழ் நாட்டில் முதல்வர் கொடுத்த வாக்குறுதிகளுக்கு எதிர்மறையான கருத்துக்கள் மாண்புமிகு அமைச்சரிடமிருந்தே வருவது அரசு ஊழியர்களின் 19 ஆண்டு கால காத்திருப்பை மேலும் நீட்டிக்க வைத்துவிடுமோ என்ற அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ - ஜியோ கூட்டமைப்பு, துறைவாரி சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தற்போதைய தமிழ்நாடு அரசின் மீதும், குறிப்பாக மாண்புமிகு முதல்வரின் மீதும் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்கள். கனிவான அணுகுமுறையும், வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டம், பறிக்கப்பட்ட சரண்விடுப்பூதியம், மறுக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வு, சிறப்பு காலமுறை ஊதியம் என்ற பெயரில் கொத்தடிமை ஊதியத்தில் உள்ள சத்துணவு/அங்கன்வாடி ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், ஓய்வூதியம், தற்காலிக பணியாளர்களின் பணி நிரந்தரம், தொகுப்பூதியத்தில் இருந்து காலமுறை ஊதியம், தனியார் முகமைகளின் மூலம் சொற்ப ஊதியத்தில் அரசுப் பணிகளை நிறைவேற்றும் மறைமுக தனியார்மயத்தை ஒழித்து குறைந்தபட்ச நியாயமான ஊதியங்களை உறுதிப்படுத்தும் அரசின் நேரடி நிரந்தர பணி நியமனங்கள் போன்ற நியாயமான கோரிக்கைகளை காலதாமதம் இன்றி நிறைவேற்றும் உறுதியான செயல்பாடுகளைத்தான் அரசிடமிருந்து அரசு ஊழியர்கள் எதிர்பார்கிறார்கள்.

இவையே அரசு ஊழியர்களை இன்னும் ஊக்கத்தோடும், கூடுதல் அர்ப்பணிப்பு உணர்வோடும் மக்கள் பணியாற்றவைக்கும் மாமருந்தாக அமையும் என்பதை மாண்புமிகு முதல்வரும் அமைச்சர் பெருமக்களும் புரிந்துகொள்ள வேண்டும். அரசு ஊழியர்களுக்கு கொடுக்கும் ஊதியத்தை செலவாக பார்க்காமல் மக்கள் நலனில் ஒரு அம்சமாக பார்த்தல்தான் அரசின் திட்டங்கள் மக்களுக்கு முழுமையான பயனை அளிக்கும் வகையில் சென்று சேரும். ஒவ்வொரு அரசாங்கமும் அதன் ஊழியர்களை புஜங்களாக பார்க்கிறதா அல்லது தொங்கு சதையாகப் பார்க்கிறதா என்பதை பொறுத்துதான் அந்த மாநிலத்தின் வளம், மக்கள் நலம், சமூக நீதி இவற்றோடு ஆட்சியின் பலமும் அமையும்.

அரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் பறிக்கும் வேதாளங்களாக உயர்திகாரிகளும், அமைச்சர் பெருமக்களும் இருக்கும் வரை அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் விக்கிரமாதித்யன்களாக மாறி தொடர்ந்து தங்கள் உரிமைகளுக்காக வாளேந்துவதைத் தவிர வேறு வழியேது? அரசு ஊழியர்களை வாளேந்த வைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது முதல்வரின் முழுப் பொறுப்பாகும். ●

## சூடா ஒரு கோப்பை சூப்

**சந்தேகம்!**




அப்பாவுக்கு
அறுபதினாயிரம்
மனைவிகள்
இருந்தும்
சந்தேகம் இல்லை.

ராமனுக்கு
ஒரு மனைவி
ஆயிரம்
சந்தேகங்கள்!

**– கபிலன்**

# சேலம் மாநில செயற்குழு முடிவின் வெற்றியை உறுதி செய்வோம்!

"பணக்காரரே.....பாராளுவோரே.....

உங்களுக்கு நாளை இல்லை

ஏனென்றால்.............

நீங்கள் பாட்டாளிக்கு

இன்று இல்லாமலாக்குகிறீர்கள்"

என்றான் ஒரு கவிஞன்

ஆம் நன்றாக நினைவிருக்கிறது 22.06.1988ல் அரசு ஊழியர் ஆசிரியர் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம் 8 லட்சம் அரசு ஊழியர், ஆசிரியர்கள் பங்கேற்று வரலாறு படைத்த மகத்தான 31 நாள் வேலை நிறுத்த போராட்டம் அது. மத்திய அரசுக்கு இணையான ஊதியம், ஒரு மாத உதியம், போனஸ் ஆகியவற்றை கொள்கை அளவில் அரசை ஏற்றுக்கொள்ள வைத்த வரலாற்று சிறப்புமிக்க போராட்டம். அந்த போராட்டத்தில் பழிவாங்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. தற்காலிக பணியாளர்கள் பணி முறிவு ஏதுமின்றி மீண்டும் பணிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 31 நாள் வேலை நிறுத்தம் 22 நாட்கள் ஈட்டிய விடுப்பில் கழிக்கப்பட்டது. இடைக்கால நிவாரணமாக ரூ.70/-ம் மருத்துவப் படியாக ரூ.15/-ம் வழங்கப்பட்டது. தொழில் வரியை அரசே ஏற்றுக்கொண்டது. இது போன்ற பல முக்கிய பயன்களை அரசு ஊழியர்கள் அப்போது பெற்றோம். 1988ம் ஆண்டில் நாம் இந்தப் போராட்டதை நடத்திய போது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இல்லை. அப்போது கவர்னர் ஆட்சி தான் நடந்து கொண்டு இருந்தது. கவர்னர் ஆலோசகரோடு 3 நாட்கள் பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதிகார வர்க்கத்தின் தலையீடு அப்போதும் இருந்தது. ஆனால் கவர்னர் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தீர்வு காண முனைப்பு காட்டினார். முடிவும் நல்ல விதமாக அமைந்தது.

2003ல் அரசு ஊழியர் ஆசிரியர்கள் மீண்டும் காலவரையற்ற போராட்டத்தை கையிலெடுத்தோம். அப்பொழுது தமிழக முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா, அதிகார வர்க்கத்தின் கைப்பாவையாக மாறி சட்டசபையிலேயே அரசு உழியர்கள் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்றும் கூறி போராடினால் எஸ்மா, டெஸ்மா உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களும் பாயும் என்றும் தமிழக மக்கள் தொகையில் அரசு ஊழியர்கள் வெறும் 2 சதவீதம் பேர் மட்டுமே. அவர்களின் ஓட்டுகள் அதிமுகவிற்கு தேவையில்லை என்று ஆர்ப்பரித்தார். அவரின் பேச்சுக்கு அரசு ஊழியர் ஆசிரியர்கள் பயப்படவில்லை மாறாக உக்கிரமான காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினோம். கோபமுற்ற ஜெயலலிதா ஒரே அரசாணையில் 1.76 லட்சம் பேரை டிஸ்மிஸ் செய்தார். அப்போதும் மனம் தளராமல் போராட்டக் களத்தில் நின்றோம். ஆனால் சில சங்கங்கள் போராட்டத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றதால் போராட்டத்தின் திசைவழி மாறியது. பிறகு உச்சநீதிமன்ற உத்திரவுக்குப் பின்னர் டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்கள் பணியில் சேர்க்கப்பட்டனர். அரசு ஊழியர்களை துச்சமென நினைத்து அதிகாரவர்க்கத்தின் பாட்டுகளுக்கு தாளம் போட்ட செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கத்தை ஊழியர் சந்திப்பு பிரச்சாரம், வாகனப் பிரச்சாரம், மாவட்டந்தோறும் பிரச்சாரம் என பல கட்ட இயக்கங்களை நடத்தி அடுத்த தேர்தலில் ஜெயலலிதாவின் ஆட்சியை தோற்றுப்போக வைத்து பகை முடிக்கும் பணி முடித்தோம். 2006ல் டாக்டர் கலைஞர் ஆட்சிக்கு வந்த பின்னர் ஜெயலலிதா ஆட்சியில் இழந்த உரிமைகளான சரண்விடுப்பு, அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகைகளை ரொக்கமாக வழங்குதல் போன்றவற்றை திரும்ப பெற்றோம். எதற்கும் அஞ்சாத இரும்பு பெண்மணி என்று அழைக்கப்பட்ட செல்வி

ஜெயலலிதாவையே எதிர்த்து நின்று போராடிய வீரர்கள் தமிழக அரசு ஊழியர்கள் என்று பெயரெடுத்தோம்.

ஜெயலலிதாவும் அதிகார வர்க்கத்தின் தவறான வழி காட்டுதலின் பேரில் அரசு ஊழியர்களை ஆசிரியர்களை பகைத்துக் கொண்டு சோரம் போய்விட்டதை ஆட்சி இழப்புக்கு பின்வு உணர்ந்து கொண்டார். அதன்பிறகு 2011ல் மீண்டும் ஆட்சிக்கு வந்தததும் அரசு ஊழியர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி சுமூக நிலைமையை கொண்டு வருவதாக கூறினார். 2011ல் தேர்தல் அறிக்கையில் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்பட்டு, பழைய பென்சன் தொடர வழிவகை செய்யப்படும் என்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற கூலி முறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார்.

ஆனால் 2011ல் பதவி ஏற்றதும் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத காரணத்தால் மீண்டும் ஒரு காலவரையற்ற போராட்டத்திற்கு தள்ளப்பட்டோம். அதிமுக என்ற எஃக்கு கோட்டையின் இரும்புத் தலைவி ஜெயலலிதா என்றும் அவரிடம் உரிமைகள் கேட்டு காலவரையற்ற வேலை நிறுத்தத்தப் போராட்டத்தில் அரசு ஊழியர்கள் ஈடுபடுவது அவர்களுக்கே ஆபத்தாக முடியும் என்று பல பேரும் 2003 அரசு ஊழியர் போராட்டத்தின் போது ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை நினைவுப்படுத்தி வேறு சிலரும் நம்மை பயமுறுத்திய போதும் நாம் 2016 பிப்ரவரியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் துணிந்து இறங்கினோம். போராட்டத்திற்கு போகுமுன் ஐந்து அமைச்சர்கள் நம்முடன் பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்தை முடித்துக்கொள்ள கேட்டபோது நாம் எழுத்துப்பூர்வமான உறுதிமொழியை அல்லது சட்டமன்றத்தில் அறிவிப்போ முதல்வர் வெளியிட்டால் மட்டுமே போராட்டத்தின் அடுத்த கட்டத்தைப் பற்றி யோசிப்போம் என்று கூறினோம். அன்று நம்முடன் பேச்சுவரர்த்தையில் ஈடுபட்ட ஐந்து அமைச்சர்களில் முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. எடப்பாடி பழனிச்சாமி, திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களும் அடங்குவர். நம்முடைய போரராட்டதின் வலிமையையும் போராட்டத்தின் நியாயத்தையும் உணர்ந்து முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 19.2.2016ஆம் தேதி தமிழக சட்டப் பேரவையில் விதி எண்.110 கீழ் 11அறிவிப்புகளை வெளியிட்டார். அந்த அறிவிப்புகளக்குப் பிறகு நாம் நம்முடைய வேலை நிறுத்தப் போராட்டத்தை விலக்கிக் கொண்டோம்.

ஆக கடந்த கால அனுபவங்களிலிருந்து நடப்பது கவர்னர் ஆட்சியாக இருந்தாலும், ஆள்வது இரும்பு மனுசியாக இருந்தாலும் எதிர்ப்பது எஃகு கோட்டையே ஆனாலும் நாம் நம்முடைய உரிமைகளைக் காப்பதிலிருந்து பின் வாங்கி அவற்றுடன் சமரசம் செய்து கொண்டதில்லை. அதன் அடிப்படையில் தான் இப்போதும் நாம் 2006 லிருந்து நமக்கு வழங்கப்படாமல் தடுக்கப்பட்டிருக்கும் உரிமைகளுக்காக தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வந்திருக்கிறோம். அதன் பின்பு அலுவலர் குழு, ஒரு நபர் குழு, குறை தீர்க்கும் குழுக்களிடம் நாம் நம்முடைய கோரிக்கைகளை தொய்வின்றி அவர்களிடம் சமர்ப்பித்து அவை சரி செய்யப்படாத நிலையில் அடுத்த கட்ட போராட்டத்திற்கு நகர்ந்து வந்திருக்கிறோம்.

15.4.2017 திருச்சியில் காலவரையற்ற வேலை நிறுத்த ஆயத்த மாநாடு நடத்தி அரசுடன் பேச்சுவார்த்தை செய்தோம். அனால் கோரிக்கைகள் தீர்க்கப்படவில்லை. வலுவான வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி தலைமைச் செயலாளரை உயர்நீதி மன்றத்தில் நிறுத்தி ஊதிய உயர்வு பெற்றோம்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் அதிமுக அரசு அமைந்தால் புதிய பென்சன் திட்டம் ரத்து செய்யப்படும், சிறப்பு காலமுறை ஊதியம் ரத்து செய்யப்பட்டு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும் என பல்வேறு அறிவிப்புகளை அதிமுக தேர்தல் காலத்தில் அறிவித்ததை நிறைவேற்ற வலியுறுத்தி கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ச்சியான போராட்டம் நடத்தியும் நம்முடைய முழுமையான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

அதனை தொடர்ந்து 2021ல் நடந்த சட்டமன்ற தேர்தலில் திமுக தேர்தல் கால வாக்குறுதியாக

புதிய பென்சன் ரத்து, தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் ரத்து செய்து வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகளை அத்தனையும் கழக அரசு அமைந்தவுடன் நிறைவேற்றப்படும் என வாக்குறுதியை மாண்புமிகு முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் அறிவத்தார். அதன் அடிப்படையில் 10 ஆண்டு கால ஊழியர் விரோத மக்கள் விரோத அதிமுக ஆட்சியை அரியனையிலிருந்து இறக்கப்பட்டது.

திமுக அரசு பதவி ஏற்று ஓராண்டில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் அறிவித்திருக்கிறது. உதாரணம் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் மாநில சுயாட்சி பறிப்பு, புதிய கல்விக்கொள்கை, நிட் தேர்வு, பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணம், கொரோனா மூன்றாவது அலையையும் சமாளித்து மக்களுக்கு இரண்டு தவணைகளில் நிவாரணம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளது.

அதே போல் கடந்த அதிமுக அரசு ஊழியர், ஆசிரியர்கள் மீது போராட்ட காலங்களில் போடப்பட்ட வழக்குகள் அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகள் ரத்து, போராட்டக் காலங்களான 2016, 2017, 2019 வேலை நிறுத்தக் காலங்களை பணிக்காலமாக அறிவித்தது, பெண்கள் மகப்பேறு 12 மாதம், அகவிலைப்படி 14 சதவீதம் வழங்கப்பட்டதை அரசு ஊழியர் சங்கம் வரவேற்கிறது. ஆனால் நிதி நிலையை காரணம் காட்டி தமிழக அரசு ஊழியர் ஆசிரியர்களின் மறுக்கப்படும் உரிமைகளின் பின்புலத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஊழியர் - மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கத்தை தொடர்ந்து வருகிறது.

7.5.2022ல் சேலத்தில் நடைபெற்ற நமது சங்கத்தின் மாநில செயற்குழுவில் கீழ்க்கண்ட இயக்கங்கள் முடிவு செய்யப்பட்டது.

1. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டில் பங்கேற்று மாண்புமிகு முதலமைச்சர் தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழியை சட்டமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என்ற நிலையில் மாண்புமிகு நிதி அமைச்சரின் பழைய பென்சன் திட்டம் அமுல்படுத்த சாத்தியமில்லை என்ற அறிவிப்பு ஊழியர்களிடையில் கோபத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. பழைய பென்சன் சாத்தியமில்லை எனறு சொன்ன நிதியமைச்சரை கண்டித்தும் முதல்வரின் கவனத்தை ஈர்த்திடும் வகையில் 9.5.2022 அன்று வட்டக் கிளைகள் மற்றும் அலுவலக வளாகங்களிலும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தவது என முடிவாற்றப்பட்டு. மிக எழுச்சிகரமாக நடைபெற்றது.

2. ஜுன் 2022 மூன்றாவது வாரத்தில் தமிழகத்தின் 7 முனைகளிலிருந்து ஊழியர் சந்திப்பு கோரிக்கை விளக்க வேன் பிரச்சாரம் நடத்துவது

3. 2022 ஜுலை 2 எழுச்சி நாள் அன்று கோரிக்கை விளக்கம் மற்றும் எதிர்கால இயக்கங்கள் குறித்தான கருத்தரங்குகள் அனைத்து மாவட்டங்களிலும் துறை சங்கங்களை இணைத்துக்கொண்டு நடத்துவது

4. 2022 ஆகஸ்டின் மூன்றாவது வாரத்தில் நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாவட்ட அளவில் தர்ணா போராட்டம் நடத்திடுவது

5. 2022 ஜுலை மூன்றவாத வாரத்தில் நமது நியாயமான நிலுவைக் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி மாநில அளவில் கோட்டை நோக்கி பேரணி நடத்துவது

மேற்கண்ட இயக்கங்களை திட்டமிட்டு மிக சக்தியாக நடத்திடுமாறு மாவட்ட மையங்களை மாநில மையம் கேட்டுக்கொள்கிறது.


இன்றைய சூழலில் வேலையின்மை அதிகரித்துக்கொண்டு வருகிறது. உலகில் அதிகமான இளைஞர்கள் உள்ள நாடு இந்தியா, தற்பொழுது 45 ஆண்டுகள் இல்லாத அளவிற்கு வேலை வாய்ப்பின்மை உருவாகி வருகிறது. மாநில அரசுத் துறையில் உள்ள காலிப்பணியிடங்கள் 4.1/2 லட்சம் உள்ள நிலையில் வேலையற்றுக்கிடக்கும் இளைய தலைமுறைக்கு உடனடியாக வேலை வழங்கி வேலைவாய்ப்பின்மை நிலைமைய அரசு தீர்க்க வேண்டும். தற்பொழுது தமிழக அரசு நிரந்தர / தற்காலிக பணியிடங்களை அழிப்பதற்கானஅரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு பணியை தனியார்மயமாக்குவது, கருவூலத் துறை, மருத்துதவத் துறை, சர்வே,

வணிகவரித் துறை, (தற்பொழுது) சத்துணவு என்று பல்வேறு துறைகளை மறு சீரமைப்பு என்ற பெயரில் அரசு பணிகளை தனியார்மயமாக்குவதும், ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கும் அரசாணைகள் வழிவகை செய்கிறது. எனவே தமிழக அரசு தனியார்மயமாகும் போக்கை கைவிட்டு, அரசுப்பணி என்பது எட்டாக்கனியாகவும், கனவாகவும் இருக்கிற நிலையில் தமிழக மக்கள் தொகையில் ஏராளமான ஆற்றலோடும், திறன்களோடும் இருக்கக் கூடிய பெரும் பகுதி இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசின் திட்டம் என்ன? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இதோடு மட்டுமல்ல நமது சமூக பாதுகாப்பாக இருக்கக்கூடிய பழைய பென்சன் அமல்படுத்த வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியக்கூடிய சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்கள், ஆஷா செவிலியர்கள் உள்ளிட்ட 3.5 லட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிடவும், சாலைப் பணியாளர்களின் 41 மாத கால பணி நிறுத்தத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், அரசுத் துறையில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கை கைவிடப் வேண்டும், முடக்கப்பட்ட சரண்டர், அகவிலைப்படி, 21 மாத நிலுவை ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்து களம் காண வேண்டிய ஆகப்பெரிய கடமை நம்முன் இருக்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்களின் நலன்களை, உரிமைகளை, பாதுகாக்கும், பெற்றுத்தரும், தீர்மானிக்கும் தனிப்பெரும் சக்தியாக அரசு ஊழியர்கள் மத்தியில் தன்னை நிலை நிறுத்தியுள்ளது என்பது கடந்த கால இயக்கங்கள் மூலம் நிருபிக்கப்படடுள்ளது. இனி வரும் காலங்களில் அரசு ஊழியர்களின் உரிமைகள், நலன்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நிலைபாடுகள் முக்கியத்துவம் பெறும் நிலையை உறுதி செய்வோம்.

எனவே தோழர்களே, நமது சங்கத்தின் மாநில செயற்குழு முடிவுகளான கருத்தரங்கம், தர்ணா, ஊழியர் சந்திப்பு இயக்கமான 7 முனைகளிலிருந்து வாகனப் பிரச்சார (ஜீப் ஜாதா) இயக்கத்தில் இன்னும் சகலப்பகுதி ஊழியர்களையும் திரட்டி நமது கோரிக்கைகளை மீட்டெடுக்கவும் ஊழியர்கள் வாழ்வில் ஒளியேற்றவுமே இப்போர் பிரகடனம். ●



ஏழைகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதே பா.ஜ.க அரசின் இலட்சியம்!
– பிரதமர் மோடி

# இயக்கத்தின் ஆணிவேர்கள்

தொலைகாட்சிகளில் அந்தக் காட்சி திரும்பத் திரும்பக் காட்டப் பட்டுக் கொண்டிருந்தத்து. தோளில் ஜோல்னா பையை மாட்டிக்கொண்டு சிறைசெல்ல தயாராகிக் கொண்டிருந்தவரை போலீஸ்காரர்கள் வீட்டுக்குள் புகுந்து தர தரவென்று இழுத்துச் செல்லும் காட்சி. அந்தக் காட்சியை பார்த்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மட்டுமல்ல பொதுமக்களும் கொஞ்சம் அதிர்ந்துதான் போனார்கள். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினால் அவர்கள் மீது எஸ்மா, டெஸ்மா மட்டுமல்ல இன்னுமுள்ள அனைத்து சட்டங்களும் பாயும் என்று சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா கொக்கரித்த பின்னரும், ஒரே அரசாணையில் ஒரு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரம் அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்த பிறகும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர்கள் பலபேரும் சிறைபிடிக்கப்பட்ட பின்னரும் அலுவலகங்களில் உட்கார்ந்திருந்த ஒருசில பேர்களையும் போராட்ட களத்திற்கு இழுத்து வந்தது மேற்சொன்ன காட்சி என்றால் அது மிகையல்ல.

2003ஆம் ஆண்டு நடந்த அரசு ஊழியர் ஆசிரியர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கு கொண்டு அப்போராட்டத்தை முன்னின்று நடத்திய அரசு ஊழியர் சங்கத் தலைவர்களில் ஒருவரான, தொழிற்சங்க இயக்கங்களில் தோழர் என்.எல்.எஸ்.என்று வாஞ்சையுடன் அழைக்கப்படும் தோழர் நெ.இல.ஸ்ரீதரன்தான் அவர்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் பொதுச் செயலாளர் உட்பட பல பொறுப்புக்களை வகித்தவர். தன்னுடைய பணி ஓய்வுக்குப் பிறகு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கத்தில் தலைவராக இன்றும் தன்னுடைய ஊழியர் சங்கப் பணிகளை தேனீயைப் போல் சுறுசுறுப்புடன் செய்துவரும் அந்த 76 வயது இளைஞரின் தொழிற்சங்க அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக அரசு ஊழியர் இதழ் ஆசிரியர் குழு ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது அந்தக் கலந்துரையாடலில் முக்கியமான சில பகுதிகள் உங்களுக்காக...

**தோழர் மு. அன்பரசு:** அருமைதோழர் என்.எல்.எஸ்.அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த வணக்கங்களும் வீரஞ்செறிந்த வாழ்த்துக்களும். உங்கள் காலத்திலும் சரி, உங்கள் காலத்திற்கு முன்பும் சரி, இப்போதும் சரி ஊழியர் சங்கங்களும் போராட்டக் களங்களும் சிறைவாசங்களும் பேச்சுவார்த்தைகளும் அரசின் உறுதிமொழிகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அப்போது இருந்த சங்கத் தலைவர்கள், இயக்க முன்னணித் தோழர்கள், ஊழியர்கள் போல இப்போதிருப்பவர்கள் உள்ளனரா என்ற கேள்விகள் அவ்வப்போது எழுந்துகொண்டிருக்கின்றன. போராட்டகளங்களுக்கு ஊழியர்களை திரட்டுவதென்பது இப்போதுள்ள ஒவ்வொரு நிர்வாகிக்கும் இமாலய சாதனையாக உள்ளது. இன்றைய அரசு ஊழியர்களிடம் போராட்ட குணமும், உரிமைகளை வென்றெடுக்கும் பலமும் குன்றிவிட்டதா என்ற ஐயப்பாடுகளும்கூட எழுகின்றன. உங்களைப் போன்ற முன்னோடிகள் அந்த காலகட்டத்தில் போராட்ட களங்களில், ஊழியர்களை ஒன்றுதிரட்டுவதில், அரசினுடனான பேச்சு வார்த்தைகளில் மேற்கொண்ட அணுகுமுறைகள் எங்களைப்போன்ற சங்கவாதிகளுக்கு முன்னுதாரணங்களாக அமைவதோடு உங்களைப்போன்ற முன்னோடித்



தோழர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் எங்களை நாங்கள் புத்தாக்கப்படுத்திக் கொள்வதற்கும் இயக்கத்தின் நடவடிக்கைகளை இன்னும் வலிவோடும் பொலிவோடும் முன்னெடுப்பதற்கும் உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறோம். மேலும் உங்கள் காலத்தில் நீங்கள் மேற்கொண்ட இயக்க நடவடிக்கைகளை படித்தாவது சங்கத்தின் பக்கம் ஈர்க்கப்பட வாய்ப்புள்ளதாகவே கருதுகிறோம். எங்களுக்கும் இயக்கத்தின் முன்னோடிகளை அழைத்து கலந்துரையாடி அவர்களை கௌரவித்த நிறைவும் இருக்கும். எனவே தோழரே, நீங்கள் உங்களுடைய சுருக்கமான முன்னுரையை தொடங்கலாம். முன்னுரை முடிந்த பின் ஆசிரியர் குழுவில் உள்ளவர்களும், நிர்வாகிகளும் தங்கள் கருத்துக்களையும் சந்தேகங்களையும் தங்களுடன் பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறார்கள்.

**தோழர் முத்துகுமாரசுவாமி:** இன்றைய கால கட்டத்தில் அகவிலைப்படி, ஊதிய உயர்வு போன்றவற்றை அரசு தர மறுக்கும் போது அரசு ஊழியர்கள் அன்றைய காலகட்டத்திலும் சரி இன்றைய காலகட்டத்திலும் சரி போராட்டங்கள் நடத்தியிருக்கிறோம். இந்த காலகட்டத்தில் முதல்வரோ அமைச்சர்களோ உயரதிகாரிகளோ அரசு ஊழியர்களுக்கு ஏற்கெனவே சம்பளம் அதிகமாக கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் மேலும் மேலும் ஊதியம் கேட்டு அரசை நிர்பந்திக்கிறார்கள் போன்ற கருத்துக்களை வடிவமைக்கும் போது அரசு ஊழியர்களும், சங்க நிர்வாகிகளும் பேஸ்புக், வாட்ஸ்ஆப், டிவிட்டர் போன்ற வலைதள தொழில்நுட்ப உதவியால் முதலமைச்சர் முதற்கொண்டு உயரதிகாரிகள் வரை கேட்ட கேள்விகளுக்கு எதிர்வினையாற்றிவிட முடிகிறது. பேஸ்புக் வாட்ஸ்ஆப் போன்ற தொழில்நுட்ப வசதிகள் இல்லாத அந்த காலகட்டங்களில் நீங்கள் இத்தகைய கருத்துருக்களுக்கு எப்படி வினையாற்றினீர்கள் அவற்றை எப்படி எதிர்கொண்டு சமாளித்தீர்கள்?

**தோழர் என்.எல்.எஸ்:** அந்த காலகட்டத்தில் குறிப்பிட்ட சில டிவிக்கள் மட்டுமே இருந்தன. ராஜ் டிவி, விஜய் டிவி போன்ற டிவிக்களிலிருந்து நிருபர்கள் அரசு ஊழியர் சங்கத்தில் காத்திருப்பார்கள். நாங்கள் அவர்களுக்கு செய்திகள் கொடுப்போம். அரசுத்தரப்பில் வரும் செய்திகளுக்கு நாங்கள் எதிர்வினை ஆற்றிய காலங்களும் உண்டு. ஒருமுறை நானும், சத்துணவு ஊழியர் சங்கத்தின் நிர்வாகியாக இருந்த தமிழரசி அவர்களும் ஜெயலலிதா அம்மையார் சொன்ன கருத்துக்கு எதிராக மீடியாவில் பேட்டி கொடுத்துவிட்டோம் என்பதற்காக எங்கள் மீது ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கை எடுத்தார். அந்த நடவடிக்கையை நாங்கள் எதிர்கொண்டோம். அப்போதெல்லாம் யார் கருத்து சொன்னால் அது இன்னார் சொன்னது என்று தெரிந்துவிடும் அதை மறைக்க முடியாது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் யார் கருத்து சொல்கிறார்கள் என்றுகூட தெரியாமல் கருத்துக்கள் நொடியில் பார்வார்ட் செய்யப்பட்டு விடுகின்றன. பார்வேர்ட் செய்யப்பட்ட செய்தியில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதைக்கூட அறியாத நிலைதான் உள்ளது. எந்த செய்தியையும் நம்ப முடிவதில்லை. ஊடகங்களிலேயே அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களை வைத்துக்கொண்டு விவாதம் நடத்துகிறார்கள். ஊடகச் செய்திகளில் நம்பகத்தன்மை இல்லாமல் போய்விட்டது. அதனால் மக்களும் அவற்றை சீரியஸாக எடுத்துக்கொள்வதில்லை.

**தோழர் தெ. வாசுகி:** நீங்கள் சந்தித்த போராட்டங்களில் மிகவும் கடுமையான போராட்டம் என்று எதைச் சொல்வீர்கள்?

**தோழர் என்.எல்.எஸ்:** பல போராட்டங்களைச் சொல்லலாம். சத்துணவு ஊழியர் சங்கப் போராட்டம், வணிக வரித்துறை போராட்டம், வேளாண்மைத் துறை போராட்டம் என்று பல போராட்டங்களைச் சொல்லலாம். ஏனென்றால் துறைவாரிச் சங்கங்கள் சிவ இளங்கோ கூட்டமைப்பில் அவருக்கு கட்டுப்பட்ட சங்கங்களாக இருந்தன. கூட்டமைப்பின் முடிவுகளை மீறி எதுவும் செய்ய முடியாமல் இருந்தன ஆனால் ஜாக்டி அமைப்பு உருவானபின் அதில் இருந்த துறைவாரிச் சங்கங்கள் அனைத்தும் 1988 போராட்டத்திற்குப் பிறகு சுதந்திரப் பறவைகளாக மாறின. அவை அனைத்தும் தங்களுக்கான போராட்டங்களை மிகுந்த வீரியத்துடன் செய்தன. அதற்கு காரணமாக இருந்தவர் தோழர் எம்.ஆர்.ஏ.

**தோழர்.சா.டானியல் ஜெயசிங்:** அப்போதைய காலகட்டத்தில் சங்கங்கள் எப்படி செயல்பட்டன? புதிய அமைப்பை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

**தோழர் என்.எல்.எஸ்:** சுருக்கமாக சொல்கிறேன். அப்போதிருந்த பொது சங்கத்தில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக சிவ இளங்கோ தேவநாதன் போன்றவர்கள் செயல்பட்ட காரணத்தினாலும், தோழர் எம்.ஆர்.ஏ. போன்றவர்கள் அதிலிருந்து விடுபட்டு தொழிற்சங்க வர்க்க உணர்வோடு இருந்த காரணத்தினாலும் சங்கத்தில் இரண்டு பிளவுகள் ஏற்பட்டன. அதன்காரணமாக மாவட்டங்களில் இருந்த சங்கங்களை கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.இப்படி 9 மாவட்டங்களில் சங்கங்களைக் கலைத்த பின்னர் 1972ல் நடவடிக்கை குழு என்ற ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒன்றுபட்ட சங்கம் வேண்டும் என்பதுதான் தோழர் எம்.ஆர்.ஏ. போன்றவர்கள் நிலைப்பாடாக இருந்தது. ஆனால் தோழர் பரதன் வேறுபாடான நிலைப்பாடு எடுத்து எம்.ஜி.ஆருக்கு விசுவாசியாக செயல்பட்டதால் சங்கம் பிளவுபடுவதை தடுக்க முடியவில்லை. அதே சமயம் தேர்தலுக்கு முன்பு வரை பரதனை நேரில் சந்தித்து பேச அனுமதித்த எம்.ஜி.ஆர். தேர்தலில் வெற்றிபெற்றபின் அவரை பார்க்க மாலையுடன் வந்த பரதனை போனிலேயே பேசி திருப்பி அனுப்பியபின்னர்தான், தோழர் எம்.ஆர்.ஏ. தேர்ந்தெடுத்த பாதைதான் சரியானது என்பதை உணரமுடிந்தது.

**தோழர்.சா.டானியல் ஜெயசிங்:** தோழர் தாங்கள் ஒரு சீரிய எம்.ஜி.ஆர்.ரசிகர் என்று கேள்விப்பட்டேன். அப்படி இருக்கும்போது அவரை எதிர்த்து போராட்டங்களில் உங்களால் எப்படி கலந்துகெசாள்ள முடிந்தது?

**தோழர் என்.எல்.எஸ்:** நான் ஒரு கிராமத்துக்காரன். அந்தகாலத்தில் எம்.ஜி.ஆர். படத்தில் புரட்சிப்பாடல்களைப் பார்த்து ஆஹா எம்.ஜி.ஆர்.எப்படி பாடுகிறார் என்று ஆச்சர்யப்பட்டு அவருடைய ரசிகனானேன். ஆனால் அவர் பாடிய பாடல்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் போன்றவர்கள் எழுதிய பாடல் என்று தெரிந்த பின்னர் தெளிவாகி விட்டேன். உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆருக்கு முதல் முதல் எம்.ஜி.ஆர். மன்றம் காஞ்சிபுரத்தில் தொடங்கியது நான்தான். எம்.ஜி.ஆர். என்னை அழைத்து சி அண்ட் டி சங்கத்தில் தலைமையை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்படி ஏற்றுக்கொண்டால் நீங்கள் சொல்கின்ற சிபாரிசுகளை நான் செய்கிறேன் என்றார். நான் அதை வேண்டாம் என்று என்னுடன் அறநிலையத்துறையில் பணிபுரிந்த வேறு ஒரு நண்பருக்கு கொடுக்க சொல்லிவிட்டேன்.

**தோழர் உ. சுமதி:** நான் பணியில் சேர்ந்தபோது முதன்முதலில் பார்த்த போராட்டம் 1988ல் நடந்த போராட்டம்தான். அப்போது அனைத்து ஊழியர்களும் போராட்டத்திற்கு வருவார்கள் போராட்டத்தை முடித்துவிட்டு அலுவலகம் போகாமல் வீட்டுக்கு திரும்பி விடுவார்கள். ஆனால் இப்போது உள்ள இளைஞர்கள் போராட்டத்திற்கு வர வைப்பது மிகப்பெரிய சவலாக சங்க நிர்வாகிகளுக்கு உள்ளது. இதற்கு காரணம் என்ன?

**தோழர் என்.எல்.எஸ்:** இன்று எந்த அரசு அலுவலகத்தில் இளைஞர்கள் இருக்கிறார்கள். காலிப்பணியிடங்களால் அலுவலகங்கள் ஊழியர்கள் இன்றி வெறிச்சோடியுள்ளன. இருக்கின்ற ஒன்றிரண்டு ஊழியர்களும் நான்கு ஐந்து பேர்களின் வேலைகளைப் பார்க்கிறார்கள். அவர்கள் நிமிர்ந்து பார்ப்பதற்குக் கூட நேரமில்லை. இந்த சூழ்நிலையில் நீங்கள் யாரை வைத்து போராட்டம் நடத்துவீர்கள்? இப்போது அலுவலகத்தில் உள்ள கொஞ்சநஞ்ச பேரை அவர்கள் பெரும்பாலும் புதிய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் உள்ளவர்களகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டத்தின் பாதகங்களை புரியவைத்து நாம்தான் போராட்டத்திற்கு அழைத்து வர வேண்டும்.

**தோழர் சா. கோதண்டபாணி:** அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்கள் பிரச்னைகளோடு மக்கள் பிரச்னைகளையும் கையிலெடுத்து பல போராட்டங்களை நடத்தியிருக்கிறது. மக்களை நோக்கிய பயணம் போன்ற இயக்கங்களையும் செய்திருக்கிறது. இதில் நமக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைத்திருக்கிறதா?

**தோழர் என்.எல்.எஸ்:** அரசு ஊழியர்கள் பிரச்னைகளைத்தாண்டி அந்தக் காலத்திலேயே தோழர் எம்.ஆர்.ஏ. கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அரசு ஊழியர் புத்தகத்தில் கார்ட்டூன்கள் வந்திருக்கின்றன. அரசியல், சமூக சிந்தனை, சமூக நீதி, ஊழல், சாதியக் கொடுமை எதிர்ப்பு, சாராயக்கடைகளை மூடுதல் உள்ளிட்ட பல சமுதாய விழிப்புணர்வுக்காக அரசு ஊழியர் சங்கம் பங்காற்றி வந்துள்ளது. சிலபேர் இந்த நடவடிக்கைகளை கேலி கூட செய்தார்கள். அரசு



ஊழியர்கள் தங்கள் பிரச்னைகளுக்காக போராடாமல் சமூக பிரச்னைகளுக்கு போய்விட்டார்கள் என்று. ஆனால் அரசு ஊழியர் சங்கத்தின் சமூகத்தின் ஓர் அங்கம் என்பதை கேலி செய்தவர்கள் மறந்துவிட்டார்கள். நாம் நடத்திய சமூகப் போராட்டங்களால் வெற்றி கிடைத்தா இல்லையா என்பதை விட நம்முடைய சமூகப் பிரஞ்சை முக்கியமானதாகும்.

**தோழர் அ. குபேரன்:** தோழர் நீங்கள் இதுவரை எத்தனை முறை போராட்டங்களில் கலந்து கொண்டதற்காக சிறை சென்றுள்ளீர்கள்?

**தோழர் என்.எல்.எஸ்:** எத்தனை முறை என்று சரியாகத் தெரியவில்லை. சிறைக்கு சென்ற வகையில் சரித்திரத்தில் இடம் பெற்றவன். முதன்முறையாக சிறைக்கு சென்றபோது 19 நாட்கள் இருந்தேன் அதன்பிறகு 18 மாதங்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருந்தேன். அதன்பிறகு 31 நாட்கள் ஜாக்டீ போராட்டத்தில் சிறையில் இருந்தேன். பின்பு 12 நாட்கள் 2003 போராட்டத்தில் சிறைவாழ்க்கை. அதன்பிறகெல்லாம் இருந்தது ஒன்று அல்லது இரண்டு நாட்கள் என்று மொத்தம் 63 நாட்கள் என்று நினைக்கிறேன். அதிக நாட்கள் சிறையில் இருந்தவர்கள் பட்டியல் வந்தபோது அதில் என் பெயர் முதலில் இருந்ததாக கூறினார்கள்.

**தோழர் இரா. மங்களபாண்டியன்:** உங்கள் கால கட்டத்தில் நடத்திய போராட்டங்களில் வெற்றி கிடைக்கும் என்று நினைத்து நடத்திய போராட்டங்களில் அவை தோல்வியில் முடிந்த அனுபவம் ஏதேனும் உண்டா தோழர்?

**தோழர் என்.எல்.எஸ்:** நிறைய உண்டு. போராட்டகளம் வரைக்கும் சென்று போராட்டம் வாபஸ் பெறப்பட்டதாக செய்திகள் வந்த அனுபவம். போராட்ட களம் போனபோது அங்கே போராட்டமே இல்லாமல் வெறிச்சோடிப் போயிருந்த அனுபவம் எல்லாம் உண்டு. ஆனால் தோல்வி அடைந்து விட்டது என்று நினைத்து வெற்றி கண்ட போராட்டம் வருவாய் கிராம உதவியாளர்கள் போராட்டம் தான் அவர்கள் போராட்டம் நடத்தி போராட்டம் தோல்வியும் முடியும் தருவாயில் அவர்களுக்காக ஒரு சங்கமே போராட்டத்தில் இறங்கி தோற்றுப்போகக்கூடிய போராட்டத்திற்கு உயிர் கொடுத்த வரலாற்றை நான் அன்றுதான் முதலில் கண்டேன்.

**தோழர் இரா. மங்களபாண்டியன்:** நம்முடைய கோரிக்கைகளை வெல்ல போராட்ட வடிவத்தை தவிர வேறு ஏதும் வடிவம் இல்லையா?

**தோழர் என்.எல்.எஸ்:** போராட்டங்களை நாம் எப்படி வேண்டுமானாலும் வடிவமைக்கலாம். ஆனால் அதில் பங்கேற்க ஊழியர்கள் தன்னார்வத்தோடு வர வேண்டும். இன்றைய கால கட்டத்தில் ஊழியர்கள் பலபேர் போராட்டத்திற்கு வராததற்கு காரணம் பயம் என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தங்களுக்கு ஓய்வூதியம் இல்லையே என்கிற எண்ணம்கூட இருக்கலாம். அல்லது இப்போதுள்ள சங்கவாதிகளால் உரிமைகளை பெற்றுத்தர முடியாது என்ற நம்பகமற்றத் தன்மை இருக்கலாம். ஆனால் எப்படி இருந்தாலும் அவர்களுடன் கலந்து பேசி இயக்கத்தின் போர்க்குணத்தை எடுத்துக்கூறி அவர்களை இயக்கத்திற்குள் கொண்டு வர வேண்டியது ஒவ்வொரு சங்கவாதிக்கும் உள்ள கடமையாகும். ஒன்றுபட்ட போராட்டங்கள் தான் உலகில் வெற்றியை ஈட்டித் தந்திருக்கின்றன. விவசாயிகள் தில்லியில் ஒருவருட காலம் உறுதியுடன் நடத்திய போராட்டம்தான் மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப்பெற வைத்திருக்கிறது. அதனால் போராட்டக்கனலை விதைத்துக்கொண்டே இருங்கள். அதுவும் ஒருநாள் எரிமலையாக வெடிக்கும். அந்த நாள்தான் நீங்கள் உகுத்த கண்ணீருக்கும் வடித்த ரத்தத்திற்கும் மருந்தாக இருக்கும்.

**கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் :** 1. மு. அன்பரசு, தலைவர், சா.கோதண்டபாணி, உ.சுமதி, சா.டானியல் ஜெயசிங், மற்றும் அ. குபேரன் மாநிலச் செயலாளர்கள், தெ.வாசுகி மற்றும் இரா.மங்களபாண்டியன், துணை பொதுச் செயலாளர்கள் தொழில்நுட்ப உதவி: ச. முத்துக்குமாரசாமிவேல், மாநில செயற்குழு உறுப்பினர்(தென்சென்னை)

**நிகழ்ச்சித் தொகுப்பு :** ஜிஜி

**நிகழ்ச்சி ஏற்பாடு:** ஆசிரியர் குழு, அரசு ஊழியர் மாத இதழ் ●



# பாதுகாக்கப்பட வேண்டிய பாதுகாப்புத் துறை

**- இரா.மங்களபாண்டியன்**


*நாடு முழுவதும் உள்ள 41 ஆயுத தளவாட தொழிற் சாலைகளை ஒன்றிணைத்து ஏழு கார்ப்பரேஷன் நிறுவனங்களாக மாற்றுவது என்பது ஒன்றிய அரசின் முடிவாக உள்ளது. நாட்டில் உள்ள ராணுவ ஆயுத தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகளுக்கு நீண்ட பாரம்பரியமும், வலுவான கட்டமைப்பும் உள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது 1787 ஆம் ஆண்டிலேயே 'ஆயுத தொழிற்சாலைகள் வாரியம்'' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இவ்வமைப்பின் கீழ் பல்வேறு காலகட்டங்களில் நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. 1791 இல் இஷாப்பூரில் அமைக்கப்பட்ட முதல் தொழிற்சாலையிலிருந்து இன்று வரையிலும் 41 உற்பத்தி தொழிற்சாலைகள், 9 பயிற்சி நிறுவனங்கள், 3 பிராந்திய விற்பனை மையங்கள், 5 ஆராய்ச்சி நிறுவனங்கள் என ஒரு வலுவான கட்டமைப்பாக ராணுவ தொழிற்சாலைகள் வாரியத்தில் கீழ் (Ordinance Factories Board) இவை வளர்ந்து நிற்கின்றன. இந்நிறுவனங்கள் அனைத்துமே இந்த தேசத்தின் பாதுகாப்பில் மிக முக்கியமான பங்களிப்பை செய்து வரும் நிறுவனங்கள் ஆகும். அண்டை நாடுகளுடனான போர் காலத்திலும் எல்லைப் பதற்றங்களின் போதும் இந்த தொழிற்சாலைகளே ராணுவத்திற்கு தேவையான உபகரணங்களை உடனுக்குடன் அனுப்பி வைத்தன. குறிப்பாக கார்கில் போரின் போது பல தொழிற்சாலைகளும் தங்கள் முழு திறனையும் பயன்படுத்தி தேசத்தை பாதுகாத்தன. இத்தகைய வலுவான கட்டமைப்பை பலவீனப்படுத்தும் முயற்சியில்தான் ஒன்றிய அரசு தற்போது ஈடுபட்டுள்ளது. தொழிற்சாலைகளை ஒன்றிணைத்து ஏழு நிறுவனங்களாக மாற்றினால்தான் இன்றைய தேவைக்கேற்ப உற்பத்தியை நவீனமாக்கவும், தேவையற்ற செலவினங்களை கட்டுப்படுத்தவும் முடியும் என அரசு சொல்கிறது. ஆனால் இது மேலோட்டமான காரணங்களே. உண்மையில் முதலில் நிறுவனங்களாக மாற்றுவது, பிறகு படிப்படியாக தனியார்மயமாக்குவது என்பதே அரசின் உண்மையான நோக்கமென்பதாலேயே இதனை கடுமையாக எதிர்க்க வேண்டியுள்ளது.*

*'ஆத்மநிர்பார் பாரத்'' என்பதே அரசின் கொள்கையாகும். அதாவது அனைத்துத் துறைகளிலும் சுயசார்பு என்பதே எங்கள் இலக்கு என்றெல்லாம் நீட்டி முழங்கும் ஒன்றிய அரசு உண்மையில் இரண்டு அம்சங்களைத்தான் தனது கொள்கையின் மையமாக கொண்டுள்ளது. ஒன்று பணமாக்குதல் (Monitisation) மற்றொன்று நவீனமயமாக்குதல் (Modernisation) ஆகியவையே அந்த இரு பிரதான அம்சங்களாகும். அதாவது அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று பணமாக்குவது, நவீனமயம் என்ற பெயரால் நிறுவனங்களின் கட்டமைப்புகளை பலவீனமாக்குவது என்பதே அரசின் கொள்கையாகும். அனைத்து துறைகளிலும் கட்டுப்பாடற்ற அந்நிய மூலதனத்தை ஈர்க்கவும், அனைத்து துறைகளிலும் அரசு-தனியார் கூட்டு எனும் நடைமுறையை*

அமலாக்கவுமான திட்டங்களை துரிதப்படுத்தும் அரசு, பெயரளவில் மட்டும் சுயசார்பு என படாடோபமாக விளம்பரம் செய்து கொள்கிறது. உண்மையில் ஒன்றிய அரசு அமலாக்குவது உண்மையான சுயசார்பு அல்ல. உதாரணமாக அரசின் கட்டுப்பாட்டில் இருந்த தொலைத் தொடர்பு நிறுவனத்தை பி.எஸ்.என்.எல் எனும் பொதுத்துறை நிறுவனமாக முதலில் மாற்றியதோடு, பிறகு அதை பலவீனப்படுத்திவிட்டு, தற்போது அதன் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கும் நடவடிக்கையின் மூலமும், இப்போது ரயில்வே துறைக்கு சொந்தமான சொத்துக்களை விற்பது எனும் முடிவை எடுத்திருப்பதன் மூலமும் அவற்றை புரிந்து கொள்ளலாம். அதன் தொடர்ச்சியே ராணுவதளவாட தொழிற் சாலைகளையும் கூட நிறுவனங்களாக மாற்றுவது எனும் முடிவு ஆகும்.

கடந்த 20 ஆண்டுகளாகவே இந்த தொழிற்சாலைகளுக்கெதிரான முயற்சிகள் நடந்து கொண்டுதான் இருந்தன. 2000 ஆண்டில், TKA நாயர் கமிட்டி, 2006ம் ஆண்டில் விஜய் கேல்கர் கமிட்டி, 2016ம் ஆண்டில் ராமன்பூரி கமிட்டி, அதைத்தொடர்ந்து டிபி ஷெகத்கர் கமிட்டி என தொடர்ச்சியாக பல்வேறு கமிட்டிகளை போட்டு இந்த தொழிற்சாலைகள் தொடர்பான விபரங்களை கேட்டது ஒன்றிய அரசாங்கம். அரசின் நோக்கத்தை புரிந்து கொண்ட இந்த கமிட்டிகளோ, அரசின் கொள்கைகளுக்கு ஏற்றவாறே பரிந்துரைகளையும் அளித்தன. அதாவது உரிய நேரத்தில் தளவாடங்களை இந்த தொழிற்சாலைகளால் வழங்க முடிவதில்லை, உற்பத்தி செலவு அதிகமாக உள்ளது. தரமும் போதுமானதாக இல்லை என்றெல்லாம் இக்கமிட்டிகள் அறிக்கைகளாக அளித்தன. ஆனால் உண்மை என்னவெனில் அரசு ஒவ்வொரு ஆண்டும் இந்த தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கீடு செய்யும் நிதி என்பது குறைந்து கொண்டே வந்தன.

மேலும் பல தொழிற்சாலைகளுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவதற்கான உதவிகளை அரசு செய்யவில்லை. மேலும் கடுமையான ஊழியர்கள் பற்றாக்குறையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இத்தகைய உண்மைகளையெல்லாம் மறைத்து விட்டு ஏதேதோ காரணங்களை சொன்னது அரசாங்கம். மேலும் மிக முக்கியமான மற்றொரு அம்சம் என்னவெனில் டிஆர்டிஓ (DRDO) எனும் ராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்கிற நிதி என்பது 0.10 க்கும் குறைவானதாகவே உள்ளது. ராணுவம் போன்ற கேந்திரமான துறையிலுள்ள ஒரு ஆராய்ச்சிக்கு இவ்வளவு குறைவான நிதி ஒதுக்கீடு செய்வது எந்த வகையிலும் போதுமானதல்ல என நாடாளுமன்ற நிலைக்குழுவும் தெரிவித்த ஆட்சேபணையையும் அரசு கண்டு கொள்ளவில்லை. இக்குழுவின் நிலைக்குழு உறுப்பினராக இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டி.கே. ரங்கராஜன் தனது ஆட்சேபணையை எழுத்துப் பூர்வமாகவும் கூட பதிவு செய்திருக்கிறார். நிலைமைகள் இவ்வாறாக இருக்க உண்மைகளை திரையிட்டு மறைத்துவிட்டு ராணுவ தளவாட தொழிற்சாலைகளை முதலில் கார்ப்பரேஷன் நிறுவனங்களாக மாற்றவும், பிறகு அதன் தொடர்ச்சியாக



தனியார்மயமாக்கவும் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் உண்மையில் ஆபத்தானவைகளே.

தொழிற்சாலைகளை ஏழு நிறுவனங்களாக மாற்றுவதென்பது, தனியார்மயமாக்களின் முதல்படியே என்பதால் இம்முடிவை கைவிட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்த போராட்டங்கள் துவங்கியுள்ளன. நாடு முழுவதும் உள்ள ராணுவத் தளவாடத் தொழிற் சாலைகளில் பணியாற்றும் சுமார் 70,000 ஊழியர்கள் ஒன்றிணைந்து வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்த 2021 ஜூலை 26 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தனர். ஆளும் ஒன்றிய அரசின் சங்கமான BMS சம்மேளனம் உட்பட இந்த வேலைநிறுத்தத்தில் பங்கேற்க ஆதரவு தெரிவித்தது. ஊழியர்களின் ஒற்றுமையை கண்டு அச்சப்பட்ட அரசு தற்போது இந்த வேலை நிறுத்தத்தை சட்டவிரோதம் என அறிவித்தது. அதற்கென தனியான சட்டத்தையும் குடியரசு தலைவரின் ஒப்புதலோடு பிறப்பித்திருக்கிறது. உண்மையில் வேலைநிறுத்தத்தை உடைப்பதற்காக ஒன்றிய அரசு தற்போது கொண்டு வந்துள்ள சட்டம்தான் மிக மோசமானதாகும். 1947ல் நிறைவேற்றப்பட்ட தொழிற்தாவா சட்டம்: 2020 ல் கொண்டுவரப்பட்ட தொழிலாளர் சட்ட தொகுப்பு ஆகியவற்றிற்கு எதிரானது என்பதோடு, சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் 87 மற்றும் 98வது பரிந்துரைகளான சங்கம் சேரும் உரிமை மற்றும் வேலைநிறுத்த உரிமை ஆகியவற்றிற்கு எதிரானதாகும். எனவே இத்தகைய மோசமான சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலும், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திலும் முறையீடு செய்வது என சிஐடியு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிய அரசின் இத்தகைய மோசமான நடவடிக்கைகளை எதிர்த்து முதற்கட்ட போராட்டங்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளன.

தொழிலாளர்களின் போராட்டங்கள் தொடர்ந்து மக்களின் போராட்டமாக பரிணமிப்பது மிக அவசியம். ஏனெனில் ராணுவ தளவாட தொழிற்சாலைகளை நிறுவனங்களாக மாற்றுவதும், தனியார்மயமாக்குவதும் தேசத்தின் பாதுகாப்பிற்கு எதிரானதே ஆகும். இத்தகைய முடிவின் தொடர்ச்சியாக, தேச பாதுகாப்பிற்கு தேவையான ராணுவ தளவாட உபகரணங்களை தனியாரிடம் வாங்குவது எனும் நிலை எதிர்காலத்தில் உருவானால், அது பெருமளவிலான ஊழலுக்கு வழிவகுப்பதோடு, தேசப் பாதுகாப்பிற்கும் கூட அச்சுறுத்தலாகவே இருக்கும். எனவே இவ்விஷயத்தில் பாதுகாப்புத்துறை ஊழியர்களோடு, அனைத்துப் பகுதி மக்களும் ஒன்றிணைந்து போராடினால் மட்டுமே நெருக்கடியிலிருந்து தேசத்தை பாதுகாக்க முடியும்.

தேசத்தைப் பாதுகாக்க, பொதுத்துறைகளைப் பாதுகாக்க தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதும் நமது கடமையாகும்.

●

## “பஞ்ச்”

மொரப்பா

புலவர் பொய் சொன்னால்
அது கவிதை!
இளையோர் சொன்னால்
அது காதல்!
வணிகன் சொன்னால்
தொழில் ரகசியம்!
வக்கீல் சொன்னால்
வாதம்!
அரசு ஊழியர் பொய்
சொன்னால் அது
நடத்தைமீறல் குற்றம்!
அமைச்சர் சொன்னால்
மட்டும்
அந்தப் பொய்யின் பேர்
`அரசின் கொள்கை
முடிவு!`



கட்டுரை

ஜூன் 18 மக்கள் எழுத்தாளர் மக்சிம் கார்க்கி நினைவு நாள்

# ஒரு புயல் பறவையின் பாடல்

- பெரணமல்லூர் சேகரன்



சோவியத் புரட்சியை முன்னெடுத்துச் செல்லவும், புரட்சிக்குப்பின் அதனை அரண்போல் காத்திடவும் தன் எழுத்துக்களையே ஆயுதமாக்கி புரட்சிப் படையின் முன்னணியில் நின்றவர் மக்சிம் கார்க்கி.

மக்சிம் கார்க்கி என்றவுடன் நம் நினைவிற்கு வருவது தாய் நாவலும் அவருடைய சிறுகதைகளும், நாடகங்களுமே. ஆனால், 1901ல் அவர் எழுதிய 'புயல் பறவையின் பாடல்' (The Song of Stormy Petrel) எனும் கவிதை மிகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. புரட்சியைப் புகழ்ந்து பாடிய இக்கவிதையை லெனின் மிகவும் பாராட்டினார். ரொமனாவ் வம்சத்தைச் சேர்ந்த ஜார் மன்னர்கள் ரஷ்யாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்தினார்கள். கருத்துச் சுதந்திரம் முற்றிலும் பறிக்கப்பட்டிருந்தது. மன்னராட்சிக்கு எதிராகக் குரலை உயர்த்தியவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளானார்கள்.

மேற்கத்திய இலக்கிய வடிவங்களில் ஒன்று அலிகரி (Allegory) எனப்படுவது. இலைமறை காயாக விஷயத்தைச் சொல்லுவது. மேலெழுந்தவாரியாக ஓர் அர்த்தத்தையும், அதனடியில் பிறிதொரு அர்த்தத்தையும் தரும் வடிவம் அது. பெரும்பாலும் அரசியல் விஷயங்கள் எழுதுவதற்குப் பயன்பட்ட இவ்வடிவம் மக்சிம் கார்க்கிக்குக் கைகொடுத்தது. இருப்பினும் கவிதை வெளிவந்ததும் கார்க்கி கைது செய்யப்படுகிறார். விடயம் நீதிமன்றம் செல்கிறது. கவிதையைப் புரிந்து கொள்ள முடியாத அதிகார வர்க்கம் குழப்பமடைகிறது. கார்க்கியை விடுவித்துவிட்டு கவிதையை மட்டும் தடை செய்கிறது. அப்படி என்னதான் அந்த கவிதையில் இருந்தது?

ஒரு பனிக்கால பகல் பொழுதில் கவிஞன் ஜன்னலருகே அமர்ந்துள்ளான். ஜன்னலுக்கு வெளியே விதவிதமான கடற் பறவைகள் திரிந்த வண்ணமிருக்கின்றன. அவைகளின் உரையாடலை கவிஞன் ஒட்டுக் கேட்கிறான். பறவைகள் இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். காக்கைகள், ரெவன், புல்ஃபின்ச் போன்ற பெரிய பறவைகள் எல்லாம் அதிகார வர்க்கமாம்; பீட்ரெல், மிஷ்கின், குருவிகள் போன்ற சிறு பறவைகள் எல்லாம் புரட்சியாளர்களாம். இந்தக் கூட்டத்தில் வடதுருவப் பறவைகளான பென்குயின்களும், தென்துருவப் பறவைகளான லூன்களும் காணப்படுகின்றன. துருவங்கள் தாண்டியிருக்கும் இவ்விரு இனங்களும் ஒன்றிணைந்து காணப்படுவதற்கு சாத்தியமேயில்லை. ஆனால், கவிஞனின் கற்பனைக்குதான் எல்லையில்லையே.

ஒரு குட்டி மிஷ்கின் பறவை தான் கேட்ட பாடல் ஒன்றை சுவைபடக் கூறுகிறது. மற்ற பறவைகள் எல்லாம் மெய் மறந்து கேட்கின்றன. ஜன்னலுக்குப் பின்னால் அமர்ந்து ஒட்டுக்கேட்கும் கவிஞனுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கிறது. புயலினும் வேகமாகப் பறந்து கொண்டே குட்டிப் பீட்ரெல் பறவை புரட்சியை வரவேற்றுப் பாடுகிறது. வரவிருக்கும் புரட்சியை தன் உரத்த குரலால் முன்னறிவிப்பு செய்கிறது. அதிகார வர்க்கத்திற்கு, ஜார் மன்னரின் எதேச்சதிகாரிகளுக்கு இப்பாடல் பிடிக்கவா செய்யும்? தடை செய்ய மாட்டார்களா என்ன?

இதோ! அந்தப் பாடலின் சாராம்சம். 'கடல் பரப்பு கொந்தளித்து காணப்படுகிறது. வலிய காற்று வீசுகிறது. கருமேகங்கள் விரைந்து செல்கின்றன. கடலுக்கும், கருமேகங்களுக்கும்

இடையில் பீட்ரெல் பறவை எந்த பயமுமின்றிப் பறக்கின்றது. உயர, உயரச் செல்கின்றது. மேகத்தை கிழித்துக் கொண்டு வரும் மின்னலெனத் தென்படுகிறது. வரவிருக்கும் புயலை உணர்த்துகிறது. பீட்ரெல் பறவையின் உரத்த குரல் மேகக் கூட்டத்தினிடையே அதிருகிறது. பறவையின் குரலில் வெற்றியின் பெருமிதம் தொனிக்கிறது. பிரமிக்க வைக்கும் துணிச்சல். பெரிய பறவைகள் எல்லாம் கடலின் சீற்றத்தைக் கண்டு அஞ்சி வெளிவரத் தயங்குகின்றன. லூன் பறவை காற்றின் வேகத்தைப் பார்த்து மிரளுகிறது. பெரிய பென்குயின் பறவைகள் பாறைகளுக்குள் பதுங்குகின்றன. ஆனால், எதற்கும் அஞ்சாமல் பீட்ரெல் பறவை மட்டும் பாடிக் கொண்டே பறக்கிறது. இடி, மின்னல், கடலின் சீற்றம் இவைகளையெல்லாம் துச்சமென மதித்து பீட்ரெல் பறவை ஆனந்தமாகப் பாடுகிறது. வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையில் உயர உயரப் பறக்கிறது. மேகங்களால் சூரியனை மறைத்துவிட முடியாது என்பதை உறுதியாக நம்புகிறது. புரட்சி நிச்சயம்; வெற்றி நிச்சயம் என்று ஆனந்த நடனமிடுகிறது.

இந்தப் பாடல் போல்ஷ்விக்குகளுக்கு உற்சாகம் அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனாலேயே இப்பாடலுக்காக கார்க்கி கைது செய்யப்பட்டார். இதனாலேயே லெனின் இந்தப் பாடலைப்பெரிதும் விரும்பினார். சோவியத் ஆட்சியும் மலர்ந்தது.

மக்கள் எழுத்தாளர் மக்சிம் கார்க்கி 1936ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் நாள் காலமானார்.

---

# தொடரட்டும் தோழமைகளின் நற்பணி

**விழிப்புடன் செயல்பட்ட ஊழியர் சங்க நிர்வாகிகளால் அதிகமாக பெறப்பட்ட இழப்பீட்டு தொகை**

திருமதி. சொர்ணம் என்பவர் நாகர்கோவில் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தட்டச்சராக உள்ளார். அவருக்கு 27.3.2022ம் தேதி இரு சக்கர வாகன விபத்தில் தலையில் அடிபட்டு நாகர்கோவிலில் உள்ள மனுவேல் எலும்புமுறிவு மருத்துவ மனையில் சுயநினைவற்ற நிலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவருக்கு அரசின் காப்பீடு திட்டத்தில் இழப்பீடு கேட்டபோது காயமடைந்த நபர் கோமா நிலையில் உள்ளதால் அவருக்கு இழப்பீடு கேட்டு காப்பீடு செய்ய இயலாது என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்ததால் பாதிக்கப்பட்ட நபரின் மகன் ஒரு லட்சம் ருபாய் டெபாசிட் செய்த பின்னர் சிகிச்சை தொடங்கப்பட்டது.

அதன்பின் திருமதி. சொர்ணம் அவர்களுக்கு நினைவு திரும்பியதும் கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்க நிர்வாகிகள் மருத்துவமனை நிர்வாகத்திடம் காப்பீடு கேட்டு காப்பீட்டு நிறுவனத்திற்கு உரிய படிவங்களை அனுப்பி வைக்க முறையிட்ட பின் காப்பீடு காரேப்பட்டு 20,000/- ருபாய் மட்டும் காப்பீடு பெறப்படடதாகவும், மீதமுள்ள தொகையை செலுத்துமாறும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்க மாநிலப் பொருளாளர் தோழர் ஏ.எஸ்.சிபு அவர்கள், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் தோழர் கிறிஸ்டோபர் அவர்களைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்து அவர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திண்டுக்கல் மாவட்டத் தலைவர் தோழர் முபாரக் அலி அவர்கள் வழிகாட்டுதல்களுடன் சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவன அதிகாரிகள் மற்றும் மருத்துவமனை நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, தொடர் முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக மருத்துவமனை மொத்த பில்தொகை ரு.5,91,345/- ல் காப்பீட்டுத் தொகையாக கழிக்கப் பட்டிருந்த ரு.1,84.000/-க்கு பதிலாக ரு.3,54,000/- காப்பீட்டுத் தொகையாக கழிக்கப்பட்டது. மேலும் கன்னியாகுமரி மாவட்ட நீதித்துறை ஊழியர்கள் திருமதி.சொர்ணம் அவர்களின் மருத்துவ செலவுகளுக்காக ரு.80,800/- நிதி வழங்கியுள்ளார்கள்.

அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளும், நீதித்துறை ஊழியர் சங்க நிர்வாகிகளும் ஒன்றிணைந்து விழிப்போடு செய்திருக்கும் இச்செயல் பாராட்டத் தகுந்தது. சங்க நிர்வாகிகள் என்றால் நிர்வாகத்திற்கு எதிராக இருப்பவர்கள், தர்ணா, மறியல், வேலை நிறுத்த போராட்டங்களில் மட்டும் ஈடுபடுபவர்கள் என்ற சிந்தனை உள்ளவர்களுக்கு அவர்கள் ஊழியர்கள் நலனுக்காகவும் உதவுபவர்கள் என்ற நற்சிந்தனையை விதைக்கும். தொடரட்டும் தோழமைகளின் நற்பணி.

டாபிகல் கட்டுரை

# லிவிங் டுகெதர்

LIVING T(W)OGETHER

## அரசு ஊழியர்களுக்கு பொருந்துமா?

**- ஜிஜி**

நேற்று கேட்டது போலத்தான் இருந்தது எங்களுடைய அலுவலகத்தில் சிஸ்டம் அனலிஸ்ட் ஆக இருக்கும் அந்தப் பெண் ஆறு மாதத்திற்கு முன்பு என்னிடம் வந்து கேட்ட கேள்வி, ``சார் லிவிங் டுகெதர் கவர்ன்மென்ட் சர்வன்ட்க்கு அப்ளை ஆகுமா?``

அந்தப் பெண் அப்படி கேட்டதும் எனக்கு தூக்கி வாரிப் போட்டது. இருப்பினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ``யாருக்காக கேக்கறீங்க? உங்க பிரெண்ட்ஸ் யாருக்காச்சும்...`` என்று கேட்பதற்குள் ``எனக்குத்தான் தோழர்.`` என்றாள் அந்தப் பெண்.

எனக்கு இன்னும் அதிர்ச்சியாக இருந்தது. ``நீங்க மேஜர். எப்படிவேணாலும் இருந்துக்கலாம்னு சட்டம் சொல்லுது. ஆனா லிவிங் டுகெதரை நீங்க சட்டபடியாக்கிக்க முடியாது. உங்க எதிர்காலத்தை நினைச்சு பாருங்க. பிடிச்சிருக்குன்னா கல்யாணம் பண்ணிக்க பாருங்க; பிரச்சனை இருந்தா சொல்லுங்க. நம்ம தோழர்களை வச்சு எந்த பிரச்சனையா இருந்தாலும் பேசி கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணிடலாம்.`` என்றேன்

``இல்ல தோழர் அந்த கட்டத்தை எல்லாம் தாண்டியாச்சி. அவரு வேற மதம். அதுதான் பிரச்னை. அதனால்தான் இருக்கிற வரைக்கும் லிவிங் டுகெதரா இருப்போம்னு முடிவு பண்ணிட்டோம். நடக்கறது நடக்கட்டும்.`` என்றவள் எழுந்து கொண்டாள். பாந்தமான அந்தப் பெண்ணைப் பார்க்க பாவமாக இருந்தது எனக்கு.

அதே பெண், ஆறுமாதம் கழித்து இன்று மீண்டும் என்னிடம் வந்து, ``தோழர் லிவிங் டுகெதர்ல இருக்கிற எனக்கு மெட்டர்நிட்டி லீவ் எலிஜிபிளா?``என்று கேட்டாள்.

அவள் சொன்னதை கேட்டதும் எனக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. இருப்பினும் அடக்கிக் கொண்டு ``கோர்ட்ல போட்டா இந்தியாவுலேயே உங்க கேஸ் தான் முதல் கேஸா இருக்கும். ஆர்டர் வாங்கிடலாம்.``

"சட்டப்படியான உரிமையா கோர முடியாவிட்டாலும், தாய்மை அடைந்த அரசு ஊழியர் என்ற வகையில மகப்பேறு விடுப்பை கேட்டுப் பார்க்கலாம். கிடைக்க வாய்ப்புகள் இருக்கு." என்றேன்.

கொஞ்சநேர யோசனைக்குப் பிறகு கேட்டேன் "தோழர் உங்க குழந்தையோட பர்த் சர்டிபிகேட்ல 'பாதர் நேம்' காலத்துல அவர் பேருக்கு பக்கத்துல என்ன போடுவீங்க 'பயாலாஜிகல் பாதர்'னா? இல்ல லிவிங் டுகெதர் பாதர்"னா?இப்பவும் சொல்றேன் தோழர் நீங்க சொல்லுங்க, அவரிடம் பேசி கல்யாணம் செஞ்சி வச்சிடறோம். இல்லாட்டி இன்னும் ஒரு வருஷம் கழிச்சி நீங்களே என்கிட்டே வந்து அவருக்கு அவர் வீட்டுல வேற ஒரு பொண்ண பார்த்து கல்யாணம் பண்ண ஏற்பாடு பண்ணிக்கிட்டு இருக்காங்க, என்ன பண்றதுன்னு? கேப்பீங்க.``என்றேன். அவள் முகம் வெளிறிப் போய் எழுந்தாள். அவள் வாழ்க்கையில் பெருங் குழப்பம் புகுந்துவிட்டது என்பது எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் புரிந்திருக்கும்.. நிம்மதி இனிமேல் அவள் சாய்ஸ் ஆக நிச்சயம் இருக்கப் போவதில்லை.

Living Together பற்றிய இந்த செய்தி ஒருபுறம் இருக்கட்டும். இப்போது Living Twogether பற்றி சமீபத்தில் வெளிவந்துள்ள அரசு கடிதம் பற்றி பார்ப்போம்:

13.04.2022ஆம் தேதி தமிழக அரசின் மனித மேலாண்மை (ஏ) துறை ஒரு அரசு கடிதத்தை வெளியிட்டு அரசு ஊழியர்களை ஆச்சர்யமும், அதிர்ச்சியும் அடைய வைத்திருக்கிறது. அரசு ஊழியர்களாக உள்ள கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும் நிலையில் அவர்கள் செய்துகொள்ளும் மற்றொரு திருமணம் செயல்திறனற்றதாவதுடன் அவர்கள் மீது இதுவரை எடுக்கப்பட்டு வந்த துறை ரீதியான ஒழுங்கு

நடவடிக்கையுடன் கூடுதலாக குற்றவியல் வழக்கையும் தொடர வழிகாட்டுதல்களை புதிதாக அரசு வெளியிட்டுள்ளது.

1973ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடத்தை விதிகளின் 19ஆம் பிரிவின் படி கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும்போது எந்தவொரு அரசுப்பணியாளரும் மற்றொரு திருமணம் புரியவோ அல்லது மற்றொரு திருமண பந்தத்தில் ஈடுபடவோ கூடாது என்று ஏற்கனவே விதி உள்ளபோது கூடுதலாக கிரிமினல் நடவடிக்கையும் வழிகாட்டு நெறிமுறைகளும் எதற்கு என்ற கேள்வி அரசு ஊழியர்களுக்கு எழுந்துள்ளது. மேற்கண்ட அரசு கடிதத்தில், ஒரு ஊழியர் அரசுப்பணியில் சேர்ந்து ஓராண்டு பணி முடிந்தவுடன் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி படிவம் 3ல் அவரது குடும்ப விவரங்களை அளித்திட வேண்டும் என்றும், துறைத்தலைமை, சம்பந்தப் பட்ட அரசு ஊழியர் கொடுத்துள்ள விவரங்களின் உண்மைத் தன்மையை சரிபார்த்து உறுதி செய்த பின்னர் பணியாளர் வழங்கிய வாரிசு நியமனத்தை (Nomination) ஏற்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி அரசு ஊழியர் பணியில் சேரும்போது அல்லது திருமணத்திற்குப் பின்னர் புதிதாக செய்யப்பட்ட நியமனம் (Nomination) தொடர்பான ஆவணகளின் உண்மை தன்மையை உறுதி செய்த பின்னர் அந்த விவரங்களை படிவம் 3-ல் பெற்று அதை பணி பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். இதில் ஏதேனும் ஐயம் எழுமாயின் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டிய நியமனதாரர்கள் (Nominees) குறித்து முடிவு செய்ய வேண்டும். அரசு ஊழியர் செய்துகொண்ட இருதுணை மனம் அல்லது வேறு தவறான நடத்தை கண்டறியப் படுவதன் பேரில் அரசு பணியாளர் நடத்தை விதி 19ஆம் விதிமீறலுக்காக தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீடு) விதிகளின்படி துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும் மற்றொரு திருமணம் புரிந்த குற்றத்திற்காக இ.த.ச.494 பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய சம்பத்தப்பட்ட அதிகார எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் புகார் அளித்து வழக்கு தொடர வேண்டும் என்று கண்டிப்புடன் கூறப்பட்டுள்ளது. அரசு ஊழியரின் சட்டப்படியான வாழ்க்கை துணைக்கு அளிக்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பலன்களை அளிப்பதில் அரசுக்கு இடையூறுகளையும், இன்னல்களையும் இந்த வாரிசுதாரர் நியமனங்கள் (Nomination) ஏற்படுத்துவதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்குப் பின்னால் தன்னுடைய ஓய்வூதியப் பலன்களை குறிப்பாக குடும்ப ஓய்வூதியத்தை சட்டபடியான மனைவி/கணவன் பெற வேண்டுமா அல்லது நியமனதாரர் படிவத்தில் அரசு ஊழியர் குறிப்பிட்டுள்ள இரண்டாம் துணை அல்லது வேறு யாரேனும் நபர்கள் பெறலாமா என்ற சந்தேகத்தை இந்த அரசு கடிதம் தெளிவு படுத்தியுள்ளது. பல நிகழ்வுகளில் குடும்ப ஓய்வூதியப் பலன்களை அரசு ஊழியரின் சட்டப்படியான மனைவி அல்லது வாரிசுதாரர்களுக்கு வழங்க முடியாமல் அரசு ஊழியர் தன்விருப்பப்படி பூர்த்தி செய்த நபருக்கு கொடுக்க வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்தி நீதிமன்றத்தின் முன் வழக்குகளாக உருமாறி அனைத்து தரப்பினருக்கும் மன உளைச்சலையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி வருகிறது. முதல் திருமணத்தை மறைத்து இரண்டாவது திருமணம் செய்துகொண்டதன் காரணமாக தன்னுடைய கணவர் தன் பெயரை நியமனதாரராக பதிவுசெய்யவில்லை என்ற விபரம் கணவரின் ஓய்வுக்கு பிறகோ அல்லது இறப்புக்குப் பிறகோ பல பெண்களுக்கு தெரிய வருவதன் காரணமாகவும் பல வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

முதல் மனைவி/கணவன் உயிருடன் இருக்கும் போது சட்டப்படியான விவாகரத்து பெறாமல் இரண்டாவது திருமணம் மேற்கொள்ளும் அரசு ஊழியர் நடத்தை விதிகளை மீறியவர் மட்டுமல்லாமல் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் தண்டிக்கக் கூடிய குற்றம் புரிந்தவர் ஆவார் என்று இருதுணை மணம் குறித்து அரசு ஊழியர் நடத்தை விதிகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தமிழக அரசுத் துறைகளில் உள்ள இதற்கான அதிகாரிகள் உணர்வுமயமான இந்த விடயத்தை அலட்சியமாக கையாண்டு வருவதை சென்னை உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

பூங்குழலி மற்றும் முத்துக்குமார் ஆகிய இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பரஸ்பர புரிந்துணர்வு அவர்களை திருமணத்திற்கு உந்தியதால் 1982 ஆம் ஆண்டு நாகர்கோவிலில் உள்ள முருகன் கோவிலில் (பெயர்கள், இடங்கள் மாற்றப்பட்டுள்ளன) திருமணம் செய்து கொண்டுள்ளனர். முத்துக்குமார் காவல் துறையில்



அதிகாரியாக இருக்கிறார். 1994ஆம் ஆண்டுவரை இவர்கள் ஒன்றாக குடும்பம் நடத்தியுள்ளனர். 1994ஆம் ஆண்டில் தன் கணவர் முத்துக்குமார் ஏற்கனவே சுமதி என்ற பெண்ணை திருமணம் செய்துள்ளார் என்பதும் அவர் மூலமாக மூன்று குழந்தைகள் பெற்றுள்ளதும் பூங்குழலிக்கு தெரிய வந்துள்ளது. அதன்பேரில் ஏற்பட்ட மன வேறுபாட்டின் காரணமாக அவர் அரசம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, காவல் துறையினர் இரு தரப்பினரிடமும் சமரசம் பேசி அதில் முத்துக்குமார், பூங்குழலியை இரண்டாம் தாரமாக வாழ வைப்பதாக உறுதி கூறி இரண்டாவது குடும்பமாக பராமரிக்க ஒப்புக்கொண்டுள்ளார். இதற்கிடையில் பூங்குழலி மற்றும் முத்துக்குமார் இருவரும்சேர்ந்து தங்களுடைய வளர்ப்பு மகளுக்கு திருமணமும் நடத்தி காளையார்பட்டியில் தங்களுக்கு சொந்த வீடும் கட்டியுள்ளனர். இந்நிலையில் 1.3.20011 அன்று முத்துக்குமார் இறந்துவிட குடும்ப ஓய்வூதியம் முதல் மனைவியும் முத்துக்குமார் பணிபதிவேடுகளில் நியமனதாரராக நியமிக்கப்பட்டுள்ள நபருமான சுமதிக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில்தான் பூங்குழலி, முதல் மனைவி சுமதிக்கு கொடுக்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தில் பாதியை தனக்கு தரவேண்டும் எனக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கில் முதல் மனைவிதான் நியமனதாரராக இருந்துள்ளார் என்றாலும் முதல் திருமணத்தை மறைத்துவிட்டு இரண்டாவது திருமணம் செய்துகொண்டு பல ஆண்டுகள் அவருடன் வாழ்கை நடத்திய அரசு ஊழியரின் நடத்தை கண்டிக்கத் தக்கது மட்டுமல்ல தண்டிக்கத் தக்கதும் ஆகும். அவரின் செய்கையால் அவர்தான் தன் சட்டப்படியான கணவர் என்று பல ஆண்டுகளாக வாழ்ந்துவிட்ட பூங்குழலியின் நிலை என்ன? தன் வாழ்வாதாரத்திற்கான சட்டப்படியான பாதுகாப்பை கோரமுடியாத நிலையில் அவரின் எதிர்காலம் பெரிய கேள்விக்குறியாகி இருக்கிறது.

முதல் மனைவிக்கு குழந்தை பிறக்கவில்லை, முதல் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை அவரால் தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட முடியாது, மனைவியின் குடும்ப சொத்து மனைவியின் தங்கையை வேறு இடத்தில் திருமணம் செய்து கொடுத்தால் கைமாறிபபோய்விடும் போன்ற பல ஆணாதிக்க காரணங்களைக் கூறி முதல் மனைவியின் சம்மதத்துடனேயே கூட இரண்டாம் திருமணம் நடந்து சில நிகழ்வுகளில் நியமனதாரர்களும் மாற்றப்பட்டுள்ளனர். அரசு ஊழியராக இருப்பவர் நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர் என்பதால் அவர் இழைக்கும் தவறுகளை மேலதிகாரிகள் தட்டிக்கேட்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுவதோடு நில்லாமல், இரண்டாவது திருமணத்திற்கு உள்ளானவரை சமரசம் செய்வது, பஞ்சாயத்து பேசுவது போன்ற நடவடிக்கைகள் தவறிழைத்த அரசு ஊழியரை காப்பாற்றுவதுடன் மட்டுமல்லாமல் பெண்களின் பாதுகாப்பு, நாட்டின் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை பாதித்து வருகின்றன என்பதைத்தான் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் இதுபோன்ற வழக்குகள் உணர்த்துகின்றன.

அதனால்தான் சென்னை உயர்நீதிமன்றம் மேற்படி பூங்குழலி வழக்கில் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அரசுக்கு, இதுசம்பந்தமாக உரிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கி அதை கண்டிப்புடன் செயல்படுத்த உத்தரவிட்டு அதன் பேரில் அரசு கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளில் குற்றவியல் வழக்குகள் தொடர வேண்டும் என்ற அரசின் அறிவிப்பு சட்டத்திற்கு புறம்பான திருமண உறவுகளை ஓரளவேனும் தடுக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

*Living Together* ஆக இருந்தாலும் *Living Two-gether* ஆக இருந்தாலும் இரண்டுமே அரசு ஊழியர்களுக்கு பொருந்தாது. எனவே, *Living together with legally wedded partner* – அதாவது சட்டப்படியான இணையுடன் மகிழ்வைத் தேடுவதே சாலச் சிறந்தது.

**ஆதாரம்:** 1. WP(MD) No.16082 OF 2014 DT:23.07.2019 MADURAI BENCH OF MADRAS HIGH COURT.

2. Govt.Letter No.29620/A1/2019.03 மனித மேலாண்மை (ஏ) துறை Dated 13.04.2022 ●

# மௌனம் கலையட்டும் மாண்புமிகு முதல்வரே!

- த. செந்தில்குமார்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக முதல்வராக பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேர இலவச உணவு உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலன் சார்ந்த அறிவிப்புகளை சட்டசபையில் அறிவித்தார். அதன் காரணமாக, ஆட்சி மாற்றத்திற்கு துணைநின்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தமிழக முதல்வர் தேர்தலுக்கு முன் அளித்த வாக்குறுதிகளில் சிலவற்றையேனும் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தனர்.

அதோடு போயிருந்தால் பரவாயில்லை. மேற்படி அறிவிப்புகளை வெளியிட்ட அன்றே சட்டசபையில் தமிழக நிதியமைச்சர் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவது சாத்தியமில்லை என்ற குண்டை தூக்கிப் போட்டதும் அரசு ஊழியர்கள் வெகுண்டு எழுந்துவிட்டனர். அரசு ஊழியர்களின் கோபக் கனல் கோட்டைக் கொத்தளத்தை தகிக்க ஆரம்பித்ததும், தான் சொன்ன வார்த்தைகளுக்கு சப்பைக்கட்டு கட்டி ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்ததுடன் அரசு ஊழியர்களை அறிவுஜீவிகள் என்று வேறு வஞ்சப் புகழ்ச்சி வேறு செய்துள்ளார் மாண்புமிகு நிதியமைச்சர்.

2003க்கு முன் ஓய்வூதியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை அரசின் கணக்கில் இருந்ததாகவும், 01.04.2003க்கு பிறகு பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் செலுத்தப்படும் தொகைகள் ஊழியர்களின் சொந்த கணக்கில் வைக்கப்படுவதாகவும் அந்தப் பணத்தை எடுக்க சட்டத்தில் இடமில்லை என்றும் அதனால் பழைய ஓய்வூதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு நடைமுறைப் படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளதாகவும் பழைய ஓய்வூதியத்திற்காக ஆண்டிற்கு ஒரு ஊழியருக்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவழிக்கப்பட்ட நிலையில், புதிய ஓய்வூதிய திட்டத்தில் ஒரு ஊழியருக்கு ரூபாய் ஐம்பதாயிரம் மட்டுமே செலவாவதாகவும் அவர் தெரிவித்ததுதான் அரசு ஊழியர்களை பொறுமைகளின் எல்லைகளை தாண்டச் செய்துள்ளது.

இராஜஸ்தான் மாநிலத்தில் ஏற்கனவே புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ், ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் (PFRDA) ஊழியர்களின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்த தொகை மற்றும் மாநில அரசின் பங்களிப்பு செலுத்தப்பட்டு வந்துள்ள நிலையில், அந்த மாநில அரசு அம்மாநில ஊழியர்கள் நலனை கருத்தில் கொண்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை எப்படியும் செயல்படுத்த வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் எந்த தடங்கல் வந்தாலும் செயல்படுத்தியே தீருவோம் என்கிற முனைப்போடு பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல் படுத்த ஆரம்பித்து விட்டது. ஆனால் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு



ஆணையத்தில் (PFRDA) தமிழ்நாடு சேராத நிலையில் தமிழக அரசின் நிதியமைச்சர், இராஜஸ்தான் மாநில அரசுக்கு உள்ள பிரச்னைகளை விட நமக்கு பெரிதாக பிரச்னைகள் ஒன்றும் வந்து விடாது எனத் தெரிந்திருந்தும் நேர்மறையாக சிந்திப்பதற்கு பதிலாக அம்மாநில அரசுக்கு PFRDA அனுப்பிய கடிதத்தை சுட்டிக்காட்டி பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் நடைமுறைப் படுத்த இயலாத நிலை உள்ளதாக கூறிவிட்டு, "இருந்தாலும் தமிழக முதல்வர் எடுக்கும் முடிவு செயல்படுத்தப்படும்." என்று கூறியுள்ளது எப்படி இருக்கிறது என்றால் "அங்கே போனால் ஆபத்து, ஆனால் நான் முதல்வர் சொன்னால் போகிறேன்." என்பதற்கு ஈடானதாகும். இதை அரசு ஊழியர்கள் புரிந்துகொள்ள மாட்டார்களா என்ன? அதனால்தான் நிதியமைச்சரின் இந்தப் பேச்சு நிதியமைச்சர் நேர்மையாக பேசவில்லை என்பதை உணர்தியுள்ளதோடு தேர்தலுக்கு முன் முதல்வர் கொடுத்த வாக்குறுதிகளின் நம்பகத் தன்மையை அரசு ஊழியர்களிடையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

ஏற்கனவே ஒன்றிய அரசு அதன் ஊழியர்களுக்கு 01.01.2022 முதல் அறிவித்த அகவிலைப்படி உயர்வை தமிழ்நாடு அரசு வழங்காமல் உள்ளதும், கோவிட் நோய்த்தொற்று செலவுகளை காரணம் காட்டி நிறுத்தப்பட்ட சரண்விடுப்பு ஊதியம் 31.03.2022க்குப் பிறகு காலவரையரையின்றி நீட்டிக்கப்பட்டுள்ளதும், கடந்த ஆட்சியில் பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஸ்ரீதர் குழு தனது அறிக்கையை கடந்த ஆட்சியிலேயே அரசுக்கு அளித்து அந்த அறிக்கையின் அடிப்படையில் பழைய ஓய்வூதியத்தை நடைமுறைபடுத்த சாத்தியமில்லை என்று கடந்த ஆட்சியாளர்களே அறிவித்துவிட்ட நிலையில் மீண்டும் அதே அறிக்கையை தூசு தட்டி எடுத்து தமிழ்நாடு அரசு ஆய்வு செய்வதாக ஒரு பொய்யான நாடகம் அரங்கேற்றப் பட்டதும், தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள், ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் போன்ற அதிகார மட்டத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை சாதாரண அரசு ஊழியர்களுக்கு வழங்கும் ஊதியத்தோடு சேர்த்து கணக்கிட்டு அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் மற்றும் படிகளை பூதாகரமாக்கி பொது வெளியில், அரசு வருவாயில் 70 சதவீதத்திற்கும் மேலாக அரசு ஊழியர்களுக்கே செலவிடுவதாக கடந்த அரசைப் போலவே இந்த அரசும் சித்தரிப்பதுமான போக்குகள் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவில் தேர்தல்களில் வெற்றிபெற்று தமிழகத்தை மாறி மாறி ஆண்டுவரும் திமுக மற்றும் அதிமுக கட்சிகள் அரசு ஊழியர்களை எந்த அளவுக்கு இழிவாக நடத்தி வருகின்றன என்பதற்கு தலைசிறந்த உதாரணங்களாகும்.

எதிர்கட்சி தலைவராக இருந்தபோது சட்டமன்ற தேர்தலுக்கு முன் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு நடத்திய வேலை நிறுத்தத்தை கைவிடுமாறும், திமுக வெற்றிபெற்று ஆட்சி அமைத்தும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்ததை ஏற்று போராட்டம் கைவிடப்பட்டதையும் அதைத் தொடர்ந்து மதுரையில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ மாநாட்டிலும், திமுக சட்டமன்ற தேர்தல் அறிக்கையிலும் திமுக வென்று ஆட்சி அமைத்தவுடன் பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் நடைமுறைப் படுத்தப்படும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டதையும் எந்த ஒரு அரசு ஊழியராலும் மறக்க முடியாது.

திமுக வென்று ஆட்சிக்கு வந்தபின் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டில் அரசின் நிதிநிலையை சரிசெய்யும் பெரும்பணியில் அரசு தற்போது கவனம் செலுத்தி வருகிறது என்றும், கண்டிப்பாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றும் தான் அளித்த வாக்குறுதியை மீண்டும் உறுதிபடுத்தியதையும் ஊழியர்கள் யாரும் மறக்கவில்லை... கடந்த பத்தாண்டுகளாக அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துடைப்பார், இந்த ஆட்சி நமக்கான விடியலைத் தரும் என்று அனைத்து அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், தேர்தலுக்கு பிறகல்ல, தேர்தலுக்கு முன்பிருந்தே அசைக்க முடியாத நம்பிக்கையோடு ஆட்சி மாற்றத்திற்கான நிலைப்பாட்டை எடுத்தார்கள். அதனால்தான் தேர்தலுக்கு முன்பே அன்றைய எதிர்கட்சி தலைவராக இருந்த நமது முதல்வர் அவர்களை அழைத்து ஜாக்டோ-ஜியோ

கூட்டமைப்பினர் மாநாடு நடத்தினார்கள் என்பதையும் முதல்வர் மறந்திருக்க முடியாது. இந்த பின்னணியில்தான் மாண்புமிகு நிதியமைச்சரின் சட்டமன்ற உரை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் மனதில் மிகப்பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது. ஆனால் இவ்வளவு நடந்த பிறகும் இது குறித்து இந்த நொடிவரை முதல்வர் காத்துவரும் மௌனம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இடையே அவர் அரசு ஊழியர்களுக்கு கொடுத்துள்ள வாக்குறுதிகளின் மேல் நம்பகமற்ற தன்மையையும், சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

நாடு முழுவதும் 01.01.2004 முதல் செயல் படுத்தப்பட்ட புதிய ஓய்வூதிய திட்டம் மறைந்த ஜெயலலிதா அம்மையார் அவர்களால் 2003ல் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர்களின் வீரஞ்செறிந்த வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக 01.04.2003 முதல் முன்கூட்டியே அமல்படுத்தப்பட்டதை எந்த அரசு ஊழியரால் மறக்க முடியும்.. பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு 01.01.2004 முதல் புதிய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தினாலும், இன்று வரை உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய இராணுவத்தினர் போன்ற பிரிவினர்களுக்கு அது செயல்படுத்தப்படவில்லை என்பதும் அவர்கள் தற்போது வரை பழைய ஓய்வூதிய திட்டத்தில் தொடர்கிறார்கள் என்பதும் யாரும் மறுக்கமுடியா உண்மைகள். இந்த பாகுபாடானது ஒரு அரசாங்கம் அதன் ஒரு பிரிவு ஊழியர்களின் கைகளில் நெய்யையும் மற்றொரு பிரிவு ஊழியர்களின் கைகளில் சுண்ணாம்பையும் கொடுத்திருப்பதற்கு ஒப்பாகும்.

இடதுசாரி கட்சிகளின் கடுமையான எதிர்ப்பு காரணமாக பாராளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டு, பிறகு, நாட்டில் எதிரெதிர் திசைகளில் அரசியல் செய்யும் காங்கிரஸ் மற்றும் பாஜக கட்சிகள் நாடாளுமன்றத்தில் உள்கூட்டணி அமைத்து ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணைய சட்டதிற்கு ஆதரவாக வாக்களித்ததால் இச்சட்டம் 18.08.2013 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மறந்து விடவில்லை. இத்திட்டத்தை முதலில் எதிர்த்த திமுக 2013ல் காங்கிரஸ் கொண்டுவந்த சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததையும், இந்தியாவிலேயே இந்த மோசடி திட்டத்தை முதன்முதலில் 2003ல் செயல்படுத்திய அரசாக அதிமுக அரசு இருந்ததையும், அதுவே இந்த திட்டத்தை எதிர்த்து 2013ல் நாடாளுமன்றத்தில் வாக்களித்ததையும் யாரும் மறந்துவிட முடியாது.

2011ல் சட்டமன்ற தேர்தல் அறிக்கையில், தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்த அன்றைய எதிர்கட்சிதலைவர் செல்வி.ஜெ. ஜெயலலிதா அவர்கள் 2011ல் மீண்டும் முதல்வராகி ஐந்து ஆண்டுகள் ஆட்சிசெய்தபோதும், பின்னர் 2016ல்மீண்டும் முதல்வராகி இறக்கும் வரையிலும் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பதையும் அந்த அம்மாவின் ஆட்சியை நடத்துவதாக கூறிக்கொண்ட எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் அம்மா கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டதையும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மறந்து விடவில்லை.

சட்டமாக்கப்படாமல் முன்தேதியிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து ஒரு சிறு அறிவிப்பின் மூலமும், அரசாணையின் மூலமும் புதிய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு சாத்தியம் என்றால்; புதிய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்து பத்து ஆண்டுகள் கழித்து முன்தேதியிட்டு அதற்கான சட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றால்; அறிமுகமாகாத நடுவண் அரசின் திட்டத்தை ஏற்றுக் கொண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக முன்தேதியிட்டு புதிய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப் படுத்தியது தமிழ்நாடு அரசுக்கு சாத்தியம் என்றால்; திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும் நடுவண் அரசின் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணைய சட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஊழியர்களின் ஊதியத்தில் பிடித்த தொகை மற்றும் அரசின் பங்களிப்பு தொகை போன்றவற்றை ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் செலுத்தாமல் ஏதோ ஒரு கணக்கு போட்டு இனி எந்த ஓய்வூதியமும் கோரமாட்டேன் என்ற நிபந்தனையோடு ஒரே தவணையில் ஒரு தொகையை அளித்துவிட்டு புதிய ஓய்வூதியம் என்ற பெயரில் ஒரு ஏமாற்று திட்டத்தை பத்தொன்பது ஆண்டுகளாக தொடர்வது சாத்தியம் என்றால்; நாடாளுமன்ற, சட்டமன்ற

உறுப்பினர்கள், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், இராணுவத்தினர் ஆகியோருக்கு பழைய ஓய்வூதியமே வழங்குவது சாத்தியம் என்றால்; இராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநில அரசுகளால் மீண்டும் பழைய ஓய்வூதியத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியம் என்றால்; தமிழ்நாடு அரசும் வாக்களித்தபடி புதிய ஓய்தியத்தை ரத்து செய்து மீண்டும் பழைய ஓய்வூதியத்தை நடைமுறைப் படுத்துவதும் நிச்சயம் சாத்தியமாகத்தானே இருக்கமுடியும்!

ஏனெனில் அரசு ஊழியர்கள் என்பவர்கள் அரசுக்கும் மக்களுக்குமான பாலமாக உள்ள மக்கள் பணியாளர்கள்தானேயன்றி எதிரிகள் அல்ல.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடந்த 19 ஆண்டுகளாக தாங்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்ட கசப்பான அனுபவங்களால் நொடிந்திருக்கும் நிலையில், முதல்வர் தங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு நேர் எதிரான கருத்துக்களை மதிப்பிற்குரிய நிதியமைச்சர் வெளிப்படுத்தியபோது அதற்கான எதிர்வினையை அவர்கள் ஆற்றியது இயல்பானதேயாகும். அரசியல் கட்சிகள் எதிர் கட்சியாக இருக்கும்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பக்கம் நின்று நியாயம் பேசுவதையும், ஆளும் கட்சியாக தேர்ந்தடுக்கப்பட்ட பின்னர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவற்றுவது சாத்தியமில்லை என சால்ஜாப்புகள் கூறி அவர்களின் நியாயமான உரிமைகளை தர மறுப்பதையும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கடந்த 19 ஆண்டுகளாக தொடர்ந்து கண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் காப்பாற்றுவார் என்ற ஆணித்தரமான நம்பிக்கைகளுடன் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட இதர பணியாளர்கள் அனைவரும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக காத்திருக்கிறார்கள். ஏற்கனவே 18 ஆண்டுகால ஏமாற்றங்களினால் விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ள அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்தருணத்தில் தன்னுடைய மௌனத்தை கலைத்து நம்பிக்கை ஊட்டும் அறிவிப்புகளை வெளியிடவேண்டும். சொன்னத்தை சொன்னபடி செய்யும் முதல்வர் எனும் பெயர் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு எக்காலமும் நிலைக்க வேண்டும். ●

# திருவாசகர்

**நீங்க ஒரு வாசகம் சொன்னாலும் அது திருவாசகம் தான்!**

மே தினத்தின் மேன்மைகளையும் அமைப்பு தினத்தின் வரலாற்றையும் சுட்டிக் காட்டிய அட்டைப்படக் கார்ட்டூன் அம்சமாக இருந்தது.

**– வே. அலெக்ஸ்பாண்டியன், தென்காசி**

கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் கவிதை திருடனுக்கு தேள் கொட்டியது போன்று இருந்தது.

**– வத்சலா ரவிச்சந்திரன், காளியாக்காவிளை**

மே தின உறுதிமொழியும், அமைப்பு தின சூளுரையும் நெஞ்சை ரீ-சார்ஜ் செய்து விட்டன.

**– என்.கோவிந்தராஜன், திருமுல்லைவாயல்**

பாஜக தமிழக தலைவர் அண்ணாமலையும், விசிக எம்எல்ஏ ஆளூர் ஷானவாஷும், தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜனும் தமிழக ஆளுநரின் தேநீர் விருந்தை திமுக மற்றும் எதிக்கட்சிகள் புறக்கணித்ததை குறித்து பேசிய பேச்சுக்களை வைத்து எழுதப்பட்டிருந்த “டீ செலவு மிச்சம்” கதை அரசியல் கலப்பில்லாமல் இருந்தாலும் அரசியலை ஞாபகப் படுத்தத் தான் செய்தது.

**– எம். மகபூப் பாஷா, மயிலாடுதுறை**

டீ செலவு மிச்சம் அரசியல் கலப்பில்லாத கதையாக இருந்தாலும் வேலைக்கு செல்லும் பெண் அரசு ஊழியர்கள் தங்கள் வீட்டில் உள்ள வேலைக்கு செல்லாத கணவன்மார்களுடன் எதிர்கொள்ளும் வெளியில் சொல்ல முடியாத அவஸ்தைகளை கோடிட்டு காட்டியது

**– தேன்மொழி மனோகரன், திருச்சிராப்பள்ளி.**

என்னவோ தெரியவில்லை, மே மாத அரசு ஊழியர் இதழ் கொஞ்சம் மெருகேறிய மாதிரி இருந்தது.

**– பி. கணேசன், பெரியபாளையம்**

``அய்யோ...என் துண்டு...`` கார்ட்டூன் நெத்தியடி தோழர். சான்ஸே இல்லை போங்க.

**– ஐ. ராமலக்ஷ்மி, தூத்துக்குடி**

வங்கிகள் இணைப்பும் குறைப்பும் எத்தகைய ஆபத்துகளை ஏற்படுத்தும் என்பதை விளக்கிய மங்கள பாண்டியன் அவர்கள் கட்டுரை சிறப்பு.

**– வாலண்டினா, கீழ்பாக்கம் கார்டன்**

அட்டைப்பட கார்ட்டூன், கதை, கவிதை, கட்டுரை, கார்ட்டூன், நையாண்டி, AISGEF மாநாடு தொகுப்பு, இயக்கச் செய்திகள் என அனைத்தும் கலந்த சத்து மாவாக இருந்தது மே 2022 அரசு ஊழியர் இதழ்.

**– வெங்கடேசன், திருவண்ணாமலை**

தோழர் தெ.வாசுகியின் கோரிக்கைகள் தினக் கட்டுரை உழைக்கும் வர்க்கம் அனைவரும் ஒன்று கூட வேண்டிய அவசியத்தை கட்டம் கட்டி காட்டியது.

**– மைக்கேல்ராஜப்பன், மன்னார்குடி**

# பாதுகாப்பான உணவு பாதி ஆரோக்கியத்திற்கு சமம்!

**- அ.தி.அன்பழகன்**

சர்வதேச உணவு பாதுகாப்பு தினமாக ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 7-ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. உணவு பழக்க நோய்கள் மற்றும் அவற்றின் தடுப்பு மேலாண்மை நுட்பங்கள் மற்றும் உணவு பாதுகாப்பு, நலவாழ்வு மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்தல் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதை இந்த தினம் நோக்கமாக கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 2018-ல் அறிமுகப்படுத்தப்பட்ட உணவு பாதுகாப்பு தினம் உலகெங்கும் சில உணவுகளால் பரவும் நோய்களை தடுத்து இறுதியில் அவற்றை ஒழிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இது உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் கூட்டு முயற்சியாகும்.

நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவது, உணவு பழக்க நோய்கள் பரவுவதை அகற்றுவது, விவசாய காலங்களில் ஆரோக்கியமான, சுகாதாரமான நடைமுறைகள் வளர்ப்பது, சந்தை மற்றும் உணவு பரிவர்த்தனை உள்ளடக்கிய எல்லா இடங்களிலும் இது இன்றியமையாததாக ஆகிவிட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலச்சியத்தை / குறிக்கோளை முன்னெடுத்து இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை 05.08.2011 முதல் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 அமலுக்கு வந்து நடைமுறை படுத்தப்படுகிறது. பாதுகாப்பான உணவு மக்களை சென்றடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் தொடர்ந்து பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கிவருகிறது. அதன் வழிகாட்டல்படி மாநிலங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் தமிழகம் பல்வேறு இலக்குகளை அடைந்து பல பரிசுகளையும் இந்திய அளவில் பெற்றுள்ளது என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

பாதுகாப்பு என்பது மிகப்பெரிய வார்த்தையாகும். பாதுகாப்பு என்பது உறுதி என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், தாயின் கருவில் இருக்கும் குழந்தையாய், தந்தையின் கைப்பற்றி நடக்கும் மகளாய் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் பல நேரங்களில் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக மாறும்போது பதைபதைப்பு, பதட்டம் வருவது இயற்கை. அந்த பதட்டத்தை போக்கி நல் வழியை காட்ட வேண்டியது ஆளும் அரசுகளின் கடமை மட்டுமல்ல, அனைவரின் கடமையாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை அனைவரும் பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதி செய்வது என்பது இறுதி இலக்காக கொண்டு செயல்பட வேண்டும் என்ற போதிலும் முதலில் அனைவருக்கும் மூன்று வேளை போதுமான உணவு கிடைக்கிறது என்பதை உறுதி செய்தாக வேண்டிய சூழலே நிலவுகிறது என்பதே உண்மை நிலை. அதற்கான செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகவே உணவு உறுதிச் சட்டம் இயற்றப்பட்டது. இது முழுமையான பலனை தந்துள்ளதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

பொது விநியோகத் திட்டம் மூடுவிழாவை நோக்கி சென்று கொண்டு உள்ளது. தமிழ்நாடு போன்ற ஒருசில மாநிலங்களில் மட்டும் இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும்! அது பாதுகாப்பான உணவாக இருக்க வேண்டும் இந்த இலக்கை அடைய இந்த ஆண்டின் உலக உணவு பாதுகாப்பு தினத்தில் (ஜூன் 7) உறுதியேற்போம்!



"அக்கா உப்புமாவை தடை பண்ணப் போறாங்களாமே, இனிமே என்னக்கா பண்றது?"

"அது உப்புமா இல்லடி 'ஷவர்மா' நீ ஒண்ணும் பயப்படாதே. அதையாரும் தடை பண்ண முடியாது."



# மகப்பேறு விடுப்பில் தமிழக அரசின் தாயுள்ளம்!

- தெ.வாசுகி

திருமணமான பெண்கள் தொழிற்சாலைகளிலும் அரசு அலுவலகங்களிலும் வேலை செய்வது அதிகரித்து வருகிறது. தொடர்ந்து பணிபுரியும் பெண்களுக்கு கர்ப்ப காலங்களிலும் பேறுகாலத்திலும் உடல் நலம் பாதிக்கிறது. கர்ப்ப காலத்தில் பெண்ணின் ஆரோக்கியம் பாதிக்கப்படும் போதும் அதற்கான சிகிச்சை எடுக்கும்போது கருவிலிருக்கும் குழந்தையை மருந்தும் மாத்திரைகளும் பாதிக்கின்றன. பிறந்த குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கான ஊட்டச்சத்திற்கு தன்தாயை சார்ந்திருக்கும் நிலை உள்ளது. சின்னஞ்சிறு குழந்தை பிறந்து சிறிது நாட்களிலேயே தாய் பணிக்குச் செல்வதால் குழந்தை தாயின் அரவணைப்பின்றியும் உரிய கவனிப்பாரின்றியும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாகவும் அல்லலுறும் சூழ்நிலை உருவாகிறது.

திருமணத்திற்கு முன்பு பணியில் சேரும் பெண்கள் தங்களது திருமணத்தை தள்ளிப்போடுவதற்கும், திருமணமான பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதை தள்ளிப்போடுவதற்கும் குறைவான மகப்பேறு விடுப்பும் காரணமாக உள்ளது. இந்தியாவில் 26 மில்லியன் குழந்தைகளில் 14.5 மில்லியன் குழந்தைகளுக்கு தாய்பால் கிடைப்பதில்லையெனவும், மகப்பேறு விடுப்பு அதிகரிக்கும் போதுதான் குழந்தை இறப்பு எண்ணிக்கை குறைவானதாக இருந்துள்ளது எனவும், ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. குழந்தைகளின் வளர்ப்பில் கணவனின் பங்கு அதிகமில்லாத நிலையில் இந்தியாவில் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு கூடுதலாகவே தேவைப்படுகிறது. அரசுகள் இதை பெண்களுக்கான சலுகையாக கருதாமல் எதிர்கால இந்தியாவின் வளர்ச்சியாக கருதவேண்டும்.

2016ல் 6 மாதங்களாக இருந்த மகப்பேறு விடுப்பு 9 மாதங்காளாக உயர்த்தப்பட்டது. திமுக தேர்தல் வாக்குறுதியின்படி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தவுடன் பட்ஜெட்டில் அறிவித்தப்படி அரசு பெண் ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பை 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணை (நிலை) எண்.89 மனிதவள மேலாண்மைத் துறை நாள் 9.9.2021ன்படி அடிப்படை விதி 101(a) ன் கீழ் வழங்கப்படும் மகப்பேறு விடுப்பு காலம் முழுவதும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மகப்பேறு விடுப்பு வழங்கும்போது பணிவரன்முறை செய்யப்பட்ட ஊழியர்களுக்கும் பணிவரன்முறை செய்யப்படுத்தப்படாத ஊழியர்களுக்கும் எந்த பாகுபாடும் காட்டக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் மகப்பேறு விடுப்பானது குழந்தை பிறந்து உயிருடன் இருக்கும் குழந்தையை பராமரிப்பதற்காக மட்டுமே என்றும் பிறந்த குழந்தை இறந்துவிட்டால் மகப்பேறு விடுப்பு நீடிக்குமா என்கிற தனிநபர் மனுவிற்கு மனதவள மேலாண்மைத் துறை அரசு செயலாளர் மகப்பேறு விடுப்பு குறித்து அரசு கடித எண் 2287786/அவி-III/2022-1 நாள் 02.05.2022 ல் கடிதத்தில் "ஓர் அரசு ஊழியர் குழந்தை பிறந்தபின் சிறிது காலத்தில் இறந்த நிலையிலும் மேற்கூறிய அரசாணைப்படி 365

நாட்களுக்கு மகப்பேறு விடுப்பு Post Confinement recuperation என்ற அடிப்படையில் முழுமையாக துய்க்கலாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


கர்ப்பினி பெண்கள் வலி மற்றும் வேதனையுடன் கூடிய பேறுகால அனுபவத்திலிருந்து மீண்டுவர நிறைய நேரமும் பாதுகாப்பும் தேவைப்படுவது மட்டுமல்லாமல் தனது பச்சிளம் குழந்தையை இழந்து பாதிக்கப்பட்ட தாய் தனது மனதளவில் மீண்டுவர குடும்பத்தினரின் அன்பும் அரவணைப்பும் தேவைப்படுகிறது. இது போன்ற நேரத்தில்தான் பெண்களுடைய உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். மகப்பேறு விடுப்பு நீடிப்பதால் அலுவலக வேலை நேரம் தளர்த்தப்படுகிறது. அலுவலகத்தையும் குடும்பத்தையும் சமன்படுத்த இந்த மகப்பேறு விடுப்பு என்பது பெண்களுக்கு வரமாக அமைந்துள்ளது. மகப்பேறு காலம் முடிந்து பணியிடத்திற்கு திரும்பும் பெண்களால் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டு அவர்கள் முன்னேற உகந்ததாக இருக்கும் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்களுக்கான மகப்பேறு விடுப்பு 9 மாதத்திலிருந்து 12 மாதகாலமாக உயர்த்தி உத்தரவிட்டதோரு நில்லாமல், குழந்தை பிறந்தபின் சிறிது காலத்தில் இறந்த நிலையிலும் மகப்பேறு விடுப்புபை முழுமையாக துய்க்கலாம் என்று அறிவித்துள்ளது இந்தியாவிற்கே முன்னுதாரணமாகியுள்ளது மகளிர் நலத்தில் அக்கரை கொண்டு தாயுள்ளத்தோடு செயலாற்றிவரும் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசை தமிழநாடு அரசு ஊழியர் சங்கம் பெருமையோடு பாராட்டுகிறது. அதே சமயம் அரசுத் துறைகளில் பணிபுரியும் பெண்களுக்கு அறிவிக்கப்பட்டது போல் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்களுக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள முறைசாரா தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அறிவித்து பணிபுரியும் பெண்கள் அனைவருக்கும் பொருளாதாரத்தில் சமமான சமூகநீதி கிடைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் ஆவண செய்யவேண்டியதும் அவசியமாகும்.

●

**கவிதை**

# பொல்லாதது ஆனது அரசின் அறிவிப்பது!

- பெரணமல்லூர் சேகரன்



சொல்வது ஒன்று செய்வது வேறெனின்
செல்லத் தகுதி அற்றவர் ஆகிறார்
வெல்வது மட்டுமே நோக்கம் கொண்டோர்
சொல்வது எதுவாகவும் இருக்கக் கண்டோம்

பத்தொன்பது ஆண்டுகள் பிடித்த பணம்
வித்தாகிப் பெருகிப் பயனான இனம்
முத்தான ஓய்வுதியம் வழங்கா குணம்
சொத்தை வாதத்தில் வீழ்ந்த அரசுமனம்

கோடி கோடியாய் பிடித்தம் நடக்கிறது
தேடித் தேடியே பார்த்தும் மறைகிறது
ஓடி ஓடியே அரசின்பங்கு ஒளிகிறது
கூடிகூடியே பொய்விதை தூவுகிறது

இல்லாத ஓய்வூதியம் புதிய பெயர் பெற்றது
பொல்லாத அரசுமது பொய்யாகக்
கூறுவது
நல்லாட்சி வயது ஓராண்டு நிறைவது
பொல்லாத தானது அரசின் அறிவிப்பது

துடித்தது தேர்தல் களத்தில் தெரிந்தது
நடித்தது உண்மை என்பது புரிந்தது
வெடித்த அரசுஊழியர் போரது முற்றும்
பிடித்தது ஆகும் அரசுமனம் மாற்றம்

புகழஞ்சலி

# புதுவையின் சிவப்பு சூரியன்



- மு.அன்பரசு

புதுச்சேரி அரசு ஊழியர் சம்மேளனத்தை உருவாக்கியவரும், சிறந்த தொழிற்சங்கவாதியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான தோழர் சி.ஹெச். பாலமோகனன் (வயது 74) மே 7ஆம் தேதி கடுமையான மாரடைப்பால் உயிரிழந்தார். மாஹே பகுதியில் தனது மாணவர் பருவம் முதல் அநீதிக்கு எதிரான போராட்டங்களை முன்நின்று நடத்தியவர். 1975 ஆம் ஆண்டு அடக்குமுறை காலத்தின் போது கைது செய்யப்பட்டு காவல்துறையின் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர். புதுச்சேரியில் அரசு ஊழியர்கள் சம்மேளனத்தை உருவாக்கிய முன்னோடி. அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும் பல்வேறு இயக்கங்களை முன்னெடுத்து வெற்றி கண்டவர். புதுச்சேரி மாநில இணைப்பிற்கு எதிராக வீரம் செறிந்த போராட்டங்களை முன்னெடுத்தவர். இயற்கை, சுற்றுச் சூழல் ஆகியவற்றை பாதுகாப்பதில் தனிக் கவனம் செலுத்தியவர். புதுச்சேரி மாநிலம் இன்று தனித்த அடையாளமாக திகழ்வதற்கும், அதன் மாநில உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும் தொடர்ந்து குரலெழுப்பியவர்.

1969 இல் நடைபெற்ற அரசு எழுத்துத் தேர்வில் புதுச்சேரி மாநிலத்தில் அதிக மதிப்பெண்களை பெற்று முதல் ஊழியராக தேர்ந்தெடுக்கப்பட்டார். புதுவை அரசின் கீழ் இயங்கும் கூட்டுறவுத் துறையில் பணியில் இளநிலை எழுத்தராக தோழர் பாலமோகனன் பணியில் சேர்ந்தார். சில மாதங்களுக்குள்ளாகவே அரசு ஊழியர் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார்.

பாலமோகனனின் அனைத்துச் செயல்பாடுகளும் அவர் நேசிக்கின்ற இடதுசாரிக் கோட்பாடுகளால் தீர்மானிக்கப்பட்டன. எனவே தோழரின் வர்க்கச் சாய்மானம் அனைத்துப் போராட்டங்களிலும் அரசு ஊழியராக பணியாற்றிய கடைநிலை ஊழியர்களுக்காகவே இருந்தது. அவரது பணியின் பெரும்பகுதி இதற்காகவே செலவிடப்பட்டது. குறிப்பாக தினக்கூலி ஊழியர்கள், ஒப்பந்த ஊழியர்கள், கௌரவப் பணியாளர்கள், பகுதிநேர ஊழியர்கள் ஆகியோரின் பணி உத்தரவாதம், நிரந்தர பணியில் இவர்களுக்கு உரிய இடம்,உரிமைகள் கோரியும் இருந்தது. எண்ணற்ற பேச்சுவார்த்தைகள், போராட்டங்களை திட்டமிட்டு, தலைமை ஏற்று நடத்தினார். வரலாற்றுச் சாதனையாக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாதஅளவில் அங்கன்வாடி ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர். சுமார் ஆயிரம் பெண் ஊழியர்கள் 25 ஆண்டுகாலமாக பணியாற்றிய, அங்கன்வாடி ஊழியர்களை பணி நிரந்தரமாக்கி வரலாற்றுச் சாதனை படைத்தது சி.எச்.பாலமோகனன் தலைமையிலான அரசு ஊழியர் சம்மேளனம்.

ஒரு அரசு ஊழியர் பணிஓய்வு நாள் பொதுவாக கொண்டாட்டங்களின் மூலமே இருக்கும். ஆனால் புதுவை மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தி, அதன் தொடர்பாக அரசின் மீது வழக்குத் தொடுத்தார் என்ற ஒரு காரணத்திற்காக பணி ஓய்வு நாள் அன்று தோழர் பாலமோகனன் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இவரின் பணி ஓய்வு நாளும் அரசு ஊழியர்கள் மறியல், கைது இவைகளுக்கு மத்தியில் நடந்தது. சராசரி அரசு ஊழியர் போலல்லாமல் பாலமோகனன் என்ற போராளிக்கு போராட்டக் களத்தில்,தற்காலிக சிறைக்கூடத்தில் பணி ஓய்வு ஆணை அளிக்கப்பட்டது. புதுச்சேரி வரலாற்றில் முதன் முறையாக தற்காலிக சிறைக் கூடத்திலேயே இவருடைய பணி ஓய்வு பாராட்டு விழாவும் நடைபெற்றது. அரசு ஊழியர்களின் உரிமைகள் குறித்து இவருடைய விரல்கள் என்றும் ஆங்கிலத்திலும் தமிழிலும் உணர்வுப்பூர்வமான எழுத்துக்களை எழுதிக் கொண்டே இருந்தன. பணி இவருடைய அனைத்து திறமைகளும் கடைமட்ட ஊழியர்களுக்காகவும், குரலற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவுமே இருந்தன. இவருடைய வாழ்க்கைப் பயணம் என்பது புதுவை மாநில தொழிற்சங்க வரலாற்றில் ஒரு அழியாத அத்தியாயமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ●

# நாற்பதாண்டு கால கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி ஒரு நடை பயணம்!

- ப.சுந்தரம்மாள்

1920ல் ஏழைக் குழந்தைகள் மதிய உணவு கிடைக்காத நிலையில் பள்ளிக்குச் சென்று படிக்க முடியவில்லை என்ற நிலையை எண்ணி சென்னை நகர்மன்றத்தில் பொதுவுடைமைவாதி சிங்காரவேலர் கடுமையான முயற்சி எடுத்தும் பிரிட்டிஷ் ஆட்சியில் மதிய உணவு வழங்க மறுத்துவிட்ட நிலையில், 1925ல் நகராட்சி பள்ளியில் மதிய உணவு திட்டம் துவக்கப்பட்டது. அதன்பின் மாநகராட்சி அளவில் செயல்பட்டுக் கொண்டிருந்த மதிய உணவுத்திட்டத்தை பிற்பாடு தமிழ்நாட்டின் முதலமைச்சரான காமராஜர் மாநிலம் முழுவதும் பரவலாக்கினார். மிகுந்த மானுட நேயமும் தொலைநோக்கும் நீண்டகால அளவில் நல் விளைவுகளையும் உருவாக்கிய மகத்தான திட்டம் இது.

பசியோடு இருக்கும் குழந்தை எப்படி சிந்திக்கும் என்ற பெரும் கருணையான கேள்வியில் பிறந்த திட்டம். பிற்பாடு எம்ஜிஆர் ஆட்சியில் அமர்ந்த போது இந்த திட்டத்தை பத்தாம் வகுப்பு வரை விரிவாக்கி சத்துணவுத்திட்டம் என்ற பெயரும் சூட்டினார். எம்ஜிஆருக்கு மங்காப் புகழைத்தந்த திட்டமாக சத்துணவுத்திட்டம் இன்றும் ஒளிர்கிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி ஆட்சியில் சத்துணவுத் திட்டத்தில் வாரம் ஒரு முறை முட்டை தருவது என்று முடிவானது. அடுத்து வந்த செல்வி ஜெயலலிதாவின் ஆட்சியில் இந்த முட்டையின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டதுடன் 14 வகை கலவை சாதம் வழங்கி மேலும் மெருகூட்டப்பட்டது. இப்படி ஒவ்வொரு முன்னாள் முதல்வர்களும் தங்கள் ஆட்சிக் காலத்தில் பசிப்பிணி போக்கும் திட்டம் என்பதால் சத்துணவுத்திட்டத்தை தாயுள்ளத்தோடே அணுகி வந்திருக்கிறார்கள்.

சத்துணவு ஊழியர்களின் ஊதியம் தொகுப்பூதியத்தில் தொடங்கி, சிறப்பு காலமுறை ஊதியம் என பெயர் மாறினாலும் குறைந்தபட்ச கல்வி முதல் கல்லூரி கல்வி வரை பயின்ற சத்துணவு ஊழியர்களுக்கு 38 ஆண்டுகளுக்குப் பின்னும் கூட குறைந்தபட்ச ஊதியம் கிடைக்காத (அமைப்பாளருக்கு ரூ.7700, சமையலர் ரூ.4000, உதவியாளருக்கு ரூ.3100) நிலையே தொடர்கிறது.

தமிழகம் முழுவதும் உள்ள அரசுப்பள்ளி சத்துணவுக் கூடங்களில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ளது. ஒவ்வொரு சத்துணவு ஊழியர்கள் 3 முதல் 7 பள்ளி சத்துணவு மையங்களை கூடுதல் பொறுப்பாக கவனித்து வர வேண்டியுள்ளது. மேலும் சமையலர் மற்றும் உதவியாளர்கள் இல்லாமல் பல மையங்கள் செயல்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற தேர்தல் வாக்குறுதியில் சத்துணவு ஊழியர்களை அரசு ஊழியகளாக்கி பதவி உயர்வும் ஊதிய உயர்வும் வழங்குவேன் எனவும், ஓய்வு பெறும் சத்துணவு ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்குவேன் எனவும், ஓய்வு பெற்றுச் செல்லும் சத்துணவு ஊழியர்களுக்கு ஒட்டுமொத்த தொகை அமைப்பாளர்களுக்கு ரூ. 5 லட்சமும், சமையலர், சமையல் உதவியாளர்களுக்கு ரூ. 3 லட்சமும் வழங்குவேன் எனவும், காலியாக உள்ள காலி பணியிடங்களை உடனே நிரப்புவேன் என வாக்குறுதி அளித்தார்கள். தேர்தல் வாக்குறுதிக்கு மாறாக கடந்த தமிழக பட்ஜெட்டில் எந்தவித அறிவிப்பும் இல்லாதது சத்துணவு ஊழியர்களை மிகுந்த ஏமாற்றத்திற்கு தள்ளியுள்ளது.

★ தமிழக முதல்வரிடம், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி ஜூன் 4ம் தேதி முதல் 10 தேதி வரை இராமேஸ்வரம், மயிலாடுதுறை, கும்மிடிப்பூண்டி, கோவை, திருப்பத்தூர், கன்னியாகுமரி, ஓசூர் ஆகிய 7 முனைகளில் இருந்து 2100 கிமீ தூரம் நடைபயணம் ஜூன் 10ம் தேதி திருச்சியில் கோரிக்கை மாநாடு

★ ஜூலை 15ல் வாழ்வாதார உரிமையும், வரையறுக்கப்பட்ட ஊதியமும் கேட்டு மாவட்ட தலைநகரில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்கும் பேரணி

★ ஆகஸ்ட் 30-ம் தேதி சென்னையில் தமிழக முதல்வர் அவர்களை சந்தித்து நீதி கேட்பது..!

ஆகிய இயக்கங்களை முன்னெடுத்துள்ளார்கள் நாற்பதாண்டுகால கோரிக்கை! நாமிருக்க பயமேன்! என்று சொன்ன முதல்வரிடம் நினைவூட்டி நிறைவேற்ற நெடுநடை செல்லும் சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகள் நிச்சயம் வெற்றிபெறும். ●

# பட்டினப் பிரவேசம்!

- குணா

மடத்தின் வெளியில் பவுன்சர்கள் ஆறு பேரும் ரகசியமாய் பேசிக் கொண்டிருந்தார்கள். கோடங்கி கேட்டான்,"என்னடா, குருஜி திடீர்னு இந்த மிட்-நைட்டுல கூப்பிட்டு இருக்காரு?"

"இப்பத்தாண்ணே ரகசிய நியூஸ் வந்துது, குருஜி அவசரமா பட்டினப் பிரவேசம் போறாராம்."

"குருஜி பட்டினப் பிரவேசம் போய் வருஷக் கணக்காவுதே, எதுனா முக்கிய விஷயம்னாதான் போவாரு." என்றான் கோடங்கி.

"அதுவும் ராவோட ராவா போறதுதான் டவுட்டா இருக்கு அண்ணா; எதுனா பெரிய மேட்டரா இருக்குமோ?" சொன்னவனே தொடர்ந்து, "எந்த மேட்டரா இருந்தா நமக்கு இன்னா அண்ணா. பட்டனத்துக்கு போனதும் தர்பார் ஹோட்டல்ல ஆப்பம் பாயா ஒரு பிடி பிடிச்சிட வேண்டியதுதான் எல்லாரும்." என்றான்.

"சரி சரி எல்லோரும் வாங்க காரை துடைச்சு ரெடி பண்ணிடலாம், 20, 25 நாளா வண்டிய எடுக்காம கெடக்குது பாருங்க." என்றவாறு காரை நோக்கி நகர்ந்த கோடங்கியை மடத்தின் வெளியில் வந்து கொண்டிருந்த கணக்குப் பிள்ளை கூப்பிட்டார். "கோடங்கி... குருஜி பல்லக்குலதான் பட்டின பிரவேசம் போறாரு. பல்லக்கை ரெடி பண்ணுங்க.`` என்றார்.



கணக்குப்பிள்ளை சொன்னதைக் கேட்டு, "இதை மொதல்லேயே சொல்லி இருக்கலாம்ல கணக்கு சார்.. பாருங்க எல்லாரும் சபாரியில் வந்திருக்கோம். லுங்கி, பனியன் சும்மாடுக்கு இப்போ எங்கே போறது?" என்றான்.

"லுங்கியிலே வரன்னும்னா நான் மொதல்லியே சொல்லியிருக்க மாட்டேனா? நீங்க இன்னிக்கு சபாரியிலதான் பல்லக்கு தூக்கிட்டு போகணும். இது குருஜியோட கட்டளை." என்றதும் அனைவரும் அமைதியாயினர்.

பல்லக்கு காட்டு வழிப் பாதையில் போய்க்கொண்டு இருந்தது. பவுன்சர்களின் சபாரி முழுவதும் வியர்வையில் ஈரமாகி இருந்தது. பல்லக்கில் அமைந்திருந்த குருஜியிடம் கோடங்கி கேட்டான், "குருஜி பட்டனத்துக்கு இன்னும் 18 மைல் இருக்கு. கார்லயே போயிருக்கலாம். அதுவும் மெயின் ரோட்டுல போகாம காட்டு வழியில போகச் சொல்லி இருக்கீங்க இந்த கும்மிருட்டுல ரொம்ப கஷ்டமா இருக்கு குரு."

"இருக்கும் இருக்கும்! இத்தனை நாட்கள் காரில் சுகமாக உட்கார்ந்துகிட்டு வந்துட்டு அவ்வப்போது குவார்ட்டரும் கோழி பிரியாணியும் சாப்பிட்டு உடம்பை பெருக்க விட்டுவிட்டு திடீர்னு பல்லக்கை தூக்கினால் கஷ்டமாகத்தான் இருக்கும்! ஒழுங்காக உடற்பயிற்சியும், கேழ்வரகு கஞ்சியும் சாப்பிட்டு உடம்பை கட்டுமஸ்தாக வைத்துக் கொள்ளுங்கள். இனிமேல் அடிக்கடி பல்லக்கில் போக வேண்டியிருக்கும்." என்றதும் குருஜியை தூக்கிக்கொண்டு

நடந்து கொண்டிருந்த அனைவரும் கப்சிப் ஆகிவிட்டனர்.

பட்டினத்தில் மகாகுரு மடாலயத்தின் முன்பு பல்லக்கு வந்து சேர்ந்ததும் இறங்கிக் கொண்ட குருஜி கோடங்கியின் கைகளில் கொஞ்சம் பணத்தை சொருகி விட்டு ``ஒரு மணி நேரம் டைம். சாப்பிட்டிட்டு வந்துடுங்க.'' என்று சொல்லிவிட்டு மடாலயதிற்குள் சென்று விட்டார்.

கோடங்கிக்கு வருத்தமாய் இருந்தது. குருஜி திடீரென்று தன் மீதும் கூட இருக்கும் பவுன்சர்கள் மீதும் ஏன் வெறுப்பை உமிழ்கிறார் என்று அவனுக்கு புரியவில்லை. பக்கத்தில் நின்ற பவுன்சர்களில் ஒருவன், “அண்ணே, வாண்ணே. ரொம்ப பசிக்குது. போய் சாபிட்டுட்டு வரலாம்.” என்றான்.

“இந்தாங்கடா.” என்றவாறு கையிலிருந்த பணத்தை எண்ணியவன் பணம் குறைவாக இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தான். இருப்பினும் அதை வெளிக்கட்டிக் கொள்ளாமல், “மணி ரெண்டுக்கு மேல ஆயிடுச்சி. தர்பார் ஹோட்டல் எல்லாம் மூடிட்டு இருப்பாங்க. பக்கத்துல எங்கியாச்சும் தள்ளுவண்டி கடையில பரோட்டா எதுனா சாப்பிட்டுட்டு எனக்கும் வாங்கிகினு வாங்க நான் இங்கே பல்லக்கை பாத்துகிறேன்.” என்றவாறு அவர்களிடம் பணத்தை அப்படியே கொடுத்தான்.

அவர்கள் சாப்பிடப் போனதும் சிறுநீர் வருவது போலிருந்ததால் அருகிலிருந்த காவலாளியிடம், “கழிப்பறை எங்கே இருக்கிறது?” என்று கோடங்கி கேட்க, காவலாளி மடத்தின் பின்புறம் கடைசியில் போகுமாறு சொல்ல, வலது புறம் உள்ள சந்தில் நுழைந்து இருட்டில் துழாவியவாரே பின்புற கடைசியில் உள்ள கழிப்பறை நோக்கி நடந்தான். கட்டிடத்தின் கடைசி அறையில் ஏதோ பேச்சு சத்தம் கேட்டது. அந்த பேசுக் குரல் குருஜியின் குரல் போல இருந்தது. பக்கத்தில் இருந்த சிலாப் கல் மீது ஏறி உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கே மகாகுருவின் முன் குருஜி மண்டியிட்டு அமர்ந்து கெஞ்சிக் கொண்டிருந்தார். அவர்களை என்ன பேசுகிறார்கள் என்று காதுகளை தீட்டிக்கொண்டு கேட்டான்.

“மகாகுரு, பெட்ரோல் டீசல் விலையை ஏத்து ஏத்துன்று ஏத்திகிட்டே இருக்காங்க. அது நமக்கு கட்டுப்படி ஆகாதுன்னு பல்லக்கை எடுத்தா... அதுக்கும் தடை போட்டுட்டாங்க! பாருங்க, உங்களை பார்க்கறதுக்கே ராவோட ராவா திருடனைப்போல் பதுங்கி வர வேண்டி இருக்கு.” என்றார் குருஜி.

“சீடரே உங்களுக்கு மட்டுமில்ல எங்களுக்கும்தான் என்ன பண்றதுன்னு தெரியல. பின்னாடி போய்பாருங்க நாலு பல்லக்கு ரெடி ஆகிக்கிட்டிருக்கு. எங்களாலயும் வண்டிகளுக்கு பெட்ரோல் டீசல் போட்டு சமாளிக்க முடியலே. பல்லக்குதான் இனிமேல சரிப்படும். இல்லாட்டி மாட்டு வண்டிதான்.``

``மாட்டை வண்டியிலே பூட்டினாத்தான் ப்ளூ கிராஸ், கிரீன் கிராஸ்னு எவென் எவனோ வர்ரானுங்களே மகாகுரு. மினிஸ்டர்தான் உங்க பக்தராச்சே. தடையை நீக்க அவர்கிட்டே சொல்லி எதுனா ஏற்பாடு பண்ணக்கூடாதா மகாகுரு?” என்று கேட்டார் குருஜி பவ்யமாக.

“அதுக்கெல்லாம் சொல்லி ஏற்பாடாகிக்கிட்டு இருக்கு சீடர். மினிஸ்டர் இந்த வாரத்துல முதல்வர் கிட்டே அப்பாயின்ட்மென்ட் வாங்கிட்டு கூடிபோறதா சொல்லி இருக்காரு. வெறும்கை வீசிட்டு போய் மினிஸ்டரையும், முதல்வரையும் பார்க்க முடியுமா? நீங்க எல்லாம் ஏதாவது நிதிதானம் செய்தால் நல்லா இருக்கும்.” என்றார் மகாகுரு.

“மகாகுரு. தப்பா நெனக்காதீங்க என் கையில ஒரு தம்படி கூட கிடையாது. நானே வண்டிக்கு பெட்ரோல் போட காசு இல்லாம பத்து நாளா திண்டாடிகிட்டு இருக்கேன். உங்களை பார்த்து ஒரு பத்தாயிரம் ரூபாவாச்சும் கடன் வாங்கிட்டு போலாமேன்னு வந்திருக்கேன். உங்க கிட்டே சொல்றதுக்கு என்ன மகாகுரு நான் சோறு சமைச்சு சாப்பிட்டு 10 நாளாவுது.''

“என்னது 10 நாளாவா சோறு பொங்கி சாப்பிடாம இருகீங்க? ஏன் அரிசி இல்லியா?'' கேட்டார் மகாகுரு.

“அரிசி எல்லாம் இருக்குஜி. காஸ் இல்லை. காசு கொடுத்து வாங்கற மாதிரியா காஸ்

விலை இருக்கு. அதனால பத்து நாளா பழம் பச்சை காய்கறினு சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன்.''

''ஏன் பசங்களை அனுப்பி சுள்ளி எடுத்துகிட்டு வர்றச்சொல்லி சமைக்கறதுதானே சீடரே?''

''இந்த பாழாப் போன ப்ரெஸ்டீஜ் நம்மளை சும்மா விடுதுங்களா? எப்பவுமே கெத்தா இருந்துட்டு, இப்படி எல்லாம் பண்ணா பசங்க என்னை 'ஒரு டம்மி பீஸ்'னு நெனைச்சுட்டா அசிங்கம் ஆயிடுமேன்னு கம்முன்னு இருக்கறேன்.'' என்று கூறியவர் அழ ஆரம்பித்து விட்டார். சுவாமிஜி எழுந்து வந்து அவரைத் தேற்றி, ''இங்கேயும் அதே நிலை தான் சிஷ்யா. இங்கேயும் சுள்ளியை பொறுக்கிட்டு வாங்கன்னா பசங்க ஒரு மாதிரி பாக்கறாங்க. அதனால `நான் யாகம் பண்ணப்போறேன். சுள்ளி எடுத்துகிட்டு வாங்கடா`ன்னு சொல்லி சமாளிச்சுகிட்டு இருக்கேன்.'' என்றார். பின்னர், ''போன வாரம் இன்கம் டாக்ஸ் ரைடு பண்ணி மடாலயத்துல இருக்கிற பணம் எல்லாத்தையும் அள்ளிட்டு போயிட்டாங்க சிஷ்யா'' என்றவர் ''கவலை படாதீங்க இன்னும் ஒரு வாரத்துல எல்லாம் சரியாயிடும். அப்புறம் நீங்க பல்லக்குல எங்கே வேணுமின்னாலும் போகலாம். இப்போதைக்கு ரெண்டு சுள்ளிக்கட்டு வேணா எடுத்துக்கிட்டு போங்க. பணத்துக்கு மட்டும் ஒரு வாரத்துல ஏற்பாடு பண்ணுங்க'' என்றார். ஜன்னல் வழியே இவற்றை பார்த்துக் கொண்டிருந்த கோடங்கிக்கு ஒரு புறம் அதிர்ச்சியாகவும் மறுபுறம் குருஜி மேல் அனுதாபமாகவும் இருந்தது.

மடாயலத்திலிருந்து வெளியே வந்த குருஜி ''எல்லோரும் சாபிட்டாகி விட்டதா? புறப்படுவோமா?'' என்று கேட்டார். ''ஆச்சு குருஜி'' என்றவர்கள், மடாயலத்து ஆட்கள் கொண்டுவந்து கொடுத்த இரண்டு சுள்ளிகட்டுகளை பல்லக்கில் போட்டுக்கொண்டு பல்லக்கை தூக்கினார்கள். கொஞ்ச தூரம் போனதும் கோடங்கி கேட்டான் ''குருஜி நீங்க சாப்பிட்டீங்களா?'' ''ம்...ம்...சாப்பிட்டேன் சாப்பிட்டேன்.'' என்றார் சுரத்தில்லாமல். கோடங்கி பல்லக்கை இறக்கச் சொன்னான். ''ஏன்டா இறக்கறீங்க?'' என்று கேட்ட குருஜியிடம் தனக்காக வாங்கிவரச் சொல்லியிருந்த பரோட்டாவையும் குருமாவையும் பிரித்து வைத்தான் கோடங்கி. ''சாப்பிடுங்க குருஜி. நீங்க பத்து நாளா சரியா சாப்பிடவில்லை, எனக்குத் தெரியும். முதல்ல சாப்பிடுங்க.'' என்றான். கொலைப் பட்டினியில் இருந்த குருஜி பரோட்டாவையும் குருமாவையும் கலக்கி பிசைந்து வாய்க்குள் உருட்டித் தள்ளிவிட்டு பத்து நாள் பசி தீர்ந்தது போல் ஒரு பெரிய ஏப்பம் விட்டார்.

கொஞ்சம் ஆசுவாசப் படுத்திக்கொண்டு ''டேய் நான் கூட உங்களை என்னவோன்னு நினைச்சுட்டேன்டா.'' என்றவர் கோடங்கியையும் மற்ற பவுண்சர்களையும் அருகில் அழைத்து அணைத்துக்கொண்டு ''டேய் நிஜமாலுமே நீங்கல்லாம் சபாரி போட்ட சாமிங்கடா!'' என்று உணர்ச்சிவசப்பட்டார். ''போலீசுக்கு பயந்துதான் உங்களை சபாரி போட்டுக்கிட்டு காட்டு வழியில வரச் சொன்னேன். இப்போ அதுக்கு அவசியம் இல்லை, மெயின் ரோட்டுலயே பேசிக்கிட்டே நடந்து போயிடலாம் வாங்கடா.'' என்றார். குருஜியின் பேச்சு கோடங்கியைத் தவிர மற்றவர்களுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. ''கோடங்கி வெள்ளிக்கிழமையில இருந்து ஆன்மிக நடை பயணம் ஆரம்பிச்சுடலாம். ஏற்பாடு பண்ணு.'' என்றார். ''உத்தரவு குருஜி.'' என்றான் கோடங்கி. அவர்கள் நடந்த திசையில் கருப்பும் சிவப்புமாய் கீழ்வானம் வெளுக்கத் தொடங்கியிருந்தது.

●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com